சோற்றில் நனைந்தனரே -- அட,
தொன்மைத் தமிழ்மக்களே !

தட்டுத் தடுமாறி — உயிர்
தள்ளாடித் தள்ளாடி
எந்தமிழ்த் தாயினை
முட்டுக் கொடுத்தேற்றி — மலை
முகட்டினில் வைத்திட
நாளுந் துடிக்கிறேன் !
கட்டுக் குலைந்ததடா — உடல் !
கால்களும் கைகளும்
சோர்வுற் றிளைத்தன !
துட்டுக் கலைந்தனரே ! — பகைச்
சோற்றில் நனைந்தனரே ! — அட,
தொன்மைத் தமிழ்மக்களே !

மறமும் குலைந்தவராய் — தன்
மானம் இழந்தவராய்,
மதத்தினில் சாதியில்
திறமும் குறைந்தவராய் — பல
தில்லுகள் முல்லுகள்
செய்பவ ராய், நல்ல
அறமும் கை விட்டவராய் — இழி
ஆடலில் பாடலில்
ஆழ்ந்தவ ராய், பல
நிறமாறும் ஒந்தியராய் — பகை
நெட்டடி வீழ்ந்தனரே — அட,
நேயத் தமிழ்மக்களே !

ஆசிரியர் பெருஞ்சித்திரனார்

சுவடி : 24
ஓலை : 7

விலை
உருபா:2-00

Scanned with CamScanner

நமக்கு வந்த மடல்கள்.

O: 1307: பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்களுக்கு வணக்கம். 'தென்மொழி' மக்கள் மொழியில் நலிந்து வருவது போல, 'தென்மொழி' இதழும் நலிவடைந்து வருகிறது என்று எழுதிய ஆசிரியவுரை கண்டேன். நூருண்டு நடந்த மெயில் நாளிதழ் நிறுத்தப்பட்டதை நாம் அறியாதவர்கள் அல்லர். அதுபோல பல தாளிகைகள் நிறுத்தப்படுவதும், தொடங்கப் படுவதும் அன்ருடம் நடைபெற்று வரும் ஒன்ருகிவிட்டது. அரசி யல் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் ஆலை அதிபர்கள் சிலரும் பல தாளிகைகளை நடத்தி வருகின்றனர். அவர்களால் பொருளியல் இழப்புகள் ஏதோ ஒரு வகையில் ஈடுகட்டப்படுகின்றன. சில தாளிகைகள் கடுமையான கட்டுரைகளைக் கொண்டதாக இருந்தாலும் விளம்பரம் பல கொடுத்து வீழ்ந்து விடாமல் நடத்தி வருகின்றன. சமயத்திற்கும் தமிழிற்கும் இனத்திற்கும் தனி இதழாக நடத்துவது வீழ்ச்சி அடைய வில்லை.

ம. பொ. சி. அவர்கள் செங்கோல் நடத்தி தம் ஆய்வுகளைப் பதிய வைப்பது போல், தென்மொழி தமிழ் காப்பகமாக இருக்கும் வகையில் தென்மொழியை மட்டும் நடத்தலாம். தமிழ்ச் சிட்டு, தமிழ்நிலம் முதலியவற்றை நிறுத்திவிடலாம். அரசியல் கலந்த தமிழ்மொழி இதழ்கள் வளர்ச்சியில் தொல்லைப்பட்டுள்ளன. இத்துயரம் தென்மொழிக்கும் வந்துள்ளது. மேலும் இதழுக்கு விளம்பரம் குருதியாகும். விளம்பரம் இல்லாத இதழ் தென்மொழி. அரசியல் அற்ற இதழ் தென்மொழி என்று கூறும் பொழுது உடன் வந்தவர் யாரும் பிரிந்து போக வழியில்லை. அரசியலுக்குள்ள வலுவற்ற தன்மை ஒற்றுமையை உடைப்பது தான். எனவே பாவலரேறு அவர்கள் தென்மொழியை மட்டும் நடத்த மறுசிந்தனை செய்யலாம். இதுவரை தென்மொழிக்குரிய ஊதிய இழப்புகளைத் தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்தலாம். நன்கொடை, வாணுள் கட்டணம், விளம்பரம் தேடித்தருதல் வகையில் பெரிதும் உதவிடுவர். வாடிய பயிரைக் கண்ட பொழுதெல்லாம் வாடினேன், என்றவர் வாழ்ந்த நாடுதானே இந்நாடு. விடிவு ஏற்படும். அன்புள்ள,

— முனைவர் ஆறு. அழகப்பன், அண்ணுமலைப் பல்கலைக்கழகம்.

O: 1308: பேரன்புடையீர்! வணக்கம். தென்மொழி சுவடி 24 இதழ் 6 கண்டேன். கண்ணீர் கொண்டேன். 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' 'தமிழ்நிலம்' இதழ்களை நிறுத்துவதா? இல்லை, தொடர்ந்து நடத்துவதா என்று எரிமலைக் கேள்வியை எழுப்பியுள்ளீர்கள். ஆசிரியவுரையில் அதன் விடையையும் மிக அழகாக எழுதியுள்ளீர்கள். ''பசுந்தழையைக் காட்டினவன் பின்னே பாய்ந்து செல்லுகிற ஆட்டுக்குட்டி போல், இது பகைவரையும் நம்பிப் போய்க் கொண்டிருக்கிறது' என்று'' இதை எப்படி முன்னேற்றுவது? இதற்கு எப்படி உணர்வு கொளுத்துவது? இதன் குருதியில் எப்படிச் சூடேற்றுவது? தமிழ்மறை பகர்கிறதன்ருே,

செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என் (420)

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்

சுவடி 24] ௨௦௧௯ மடங்கல் (ஆக-செப்'88) [ஓலை 7

தினமணியும் சிலநேரங்களில் உண்மை பேசுகிறதே!

இந்தியாவில் இப்பொழுது நடைபெறுவது முற்றிலும் **முதலாளிய — பார்ப்பனீய ஆட்சி** என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும். எந்தப் பெரிய சிந்தனையாளராக இருந்தாலும், அரசியலாளராக இருந்தாலும் —மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. ஆனால், ***தினமணி*** போலும் வலிமையுள்ள பச்சைப் பார்ப்பன ஏடுகள் தங்களுக்கிருக்கும் வாய்ப்பு வசதிகளால், தமிழரின் மொழியியல், இலக்கிய — இலக்கணவியல், வரலாற்றியல், கலை — பண்பாட்டியல், அரசியல், பொருளியல் முதலிய அனைத்து வாழ்வியல் கூறுகளிலும், தங்களுக்குச் சார்பான பார்ப்பனிய வெளிப்பாடுகளே மேம்பட்டனவாகவும், உயர்ந்தனவாகவும், ஏதோ தெய்வீகம் பொருந்தியனவாகவும், இட்டுக்கட்டிக் கூறித் தங்களையும் தங்கள் இனத்தையும் நாள் தோறும் கட்டிக் காத்துக் கொண்டு இருக்கின்றனர்.

தினமணி, தினமலர், துக்ளக், போலும் இதழ்கள் அன்றாடம் பரப்பிவரும் பச்சைப் பார்ப்பனியக் கோட்பாடுகளையும், தங்கள் இன நல மேம்பாட்டுக்கும், சாதி உயர்வைத் தக்க வைத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கும், அவற்றுக்காக மட்டுமே அவை போடும் தேசிய ஒருமைப்பாட்டுப் புனைவுக்கும் (வேஷத்திற்கும்), நடிப்புக்கும், அவ்வப்பொழுது உடனுக்குடன் விடை கொடுத்து, அவற்றின் வெளிப்பகட்டுப் புனைவுகளை அம்பலமாக்கும்படி நமக்கு வாய்ப்பு வசதியில்லையே, என் செய்வது? அவ்வாறு வாய்ப்பிருக்கும் சில தமிழ்ப் பிறவிகளோ, போதிய அறிவு வலிவில்லாமலும், இருந்தாலும் அவற்றை உணராமலும், உணர்ந்தாலும் — அவற்றைச் சொல்ல விரும்பாமலும் இருந்து, அவ்வினத்துக்கும், அவ்வினஞ்சார்ந்த அரசுக்கும் நல்ல பிள்ளைகளாக நடந்து தங்களை வாழ்வித்து வயிறு வளர்த்துக் கொள்கின்றன.

நாமோ, உடனுக்குடன் அவ் விதழ்களுக்கு விடைகூறுமற் போவதால், அவர்களை எதிர்க்க யாருமே இல்லை என்னும் அறிவு அகங்காரத்துடன் தொடர்ந்து, துணிந்து, தமிழ்க்கும் தமிழினத்துக்கும் எதிரான செய்திகளையும் செயல்களையும், போற்றியும் ஆதரித்தும் ஊக்கப்படுத்தியும், உகந்த, உடன்பாடான செய்திகளையும் செயற்பாடுகளையும் தூற்றியும் எதிர்த்தும், தாக்கியும் வருகின்றன.

இந்நிலைகளில் 'தினமணி' முன்னோடித் தனமாகவும், கரவாகவும், சூழ்ச்சியாகவும் இயங்குவதை அன்பர்கள் அறிந்திருக்கலாம். அதற்குக் காரணம் அதில் ஆசிரியர்களாக வந்தமரும் பார்ப்பனர்கள் தமிழ்ப்படித்தவர்கள், போல் தமிழ்மேல் பற்றுள்ளவர்களைப் போல் வெளிக்குக் காட்டிக் கொள்ளும் படு அறிவாளித்தனமானவர்கள்.

ஆனால், அவர்கள் இவ்வாறு இருப்பினும், ஒருவகையில் இராசீவைப் பிடிக்காதவர்களாக நடந்து கொள்ள வேண்டிய சூழலில் உள்ளவர்கள் ஏனெனில் அவர்கள் முதலாளிமார்கள் இராசீவுக்கு ஆகாதவர்கள். எனவே இராசீவும், இந்திரா பேராயமும் தங்கள் இனத்தவர்களாக இருந்தாலும், அவர்களின் முதலாளிகளுக்காக இராசீவை வெறுப்பவர்களாக நடிக்க வேண்டியுள்ளது.

அந்த வகையில் **தினமணியில்** சிற்சில நேரங்களில் இராசீவைப் பற்றிய உண்மையான திறனாய்வுகளும், வெறுப்பு விருப்புகளும் வெளிப்பட்டு விடுவதுண்டு. அக்கால் **தினமணி** மிக நேர்மையாகவும் உண்மையாகவும் அறிவாளித்தனமாகவும் நடந்து கொள்வதுபோல் ஒரு மயக்கத்தை, ஒரு மாயத்தை, ஒரு தோற்றத்தை ஏற்படுத்திவிடும். மற்றபடி, அதுபோலும் செய்தியிதழ்களாகட்டும், கிழமை, மாத இதழ்களாகட்டும், அவற்றின் காந்த முட்கள் எப்பொழுதுமே சமற்கிருதம், பார்ப்பனியம், ஆரியம் என்னும் துருவங்களை நோக்கியே திரும்பியிருக்கும்.

Scanned with CamScanner

இதற்குச் சான்றாக மிக அண்மையில் வெளிப்படுத்தப்பட்ட ஓரிரண்டு உண்மைச் செய்திகளைத் தினமணி என்னும் ஒரு செய்தி யிதழிலிருந்து மட்டுமே எடுத்துத் தருகிறோம். அன்பர்கள் அவ்விதழின் கண்ணோட்டத்தையும் மீறி வெளிவந்திருக்கும் உண்மைகளாக இவற்றைக் கண்டுகொள்க. நீண்ட விரிவான, விளக்கமான ஆய்வு-விளக்கங்களும் தேவையில்லை. எச்சரிக்கைக்காக மட்டும், ஒரு சோற்று ஒரு பதமாக இவற்றைத் தருகிறோம்.

இவ்விடத்தில் ஒன்றை நாம் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தினமணி போலும், பச்சைப் பார்ப்பன இன வெறி இதழ்கள், **இராசீவ்** போலும் அரசியல் எத்தர்களைக் கண்டிப்பது போல் கண்டித்துப் பேசினாலும், அந்தவகையில் தாங்கள் மிக நடுநிலையாளர்கள் என்று ஒருவாறு காட்டிக் கொண்டாலும், எப்பொழுதும் அவர்கள் நோக்கம் தங்கள் இனத்தையே ஆளும் இனமாக நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதிலேயே இருக்கும் என்பதை மறந்து விடக்கூடாது. இராசீவையோ அல்லது பார்ப்பனர் தலைமையேற்றிருக்கும் அரசையோ கண்டித்துத் **தினமணி, துக்ளக், ஆனந்த விகடன், கல்கி** — பார்ப்பனர்கள் எழுதினாலும் பேசினாலும், அவர்களைப் போல் மற்ற **கருணாநிதி, வீரமணி** போன்றவர்கள் பேசுவதையோ எழுதுவதையோ பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதையும், அந்நிலையில் இவர்கள் திருப்பித் தாக்கவும் தயங்க மாட்டார்கள் என்பதையும் கூட நாம் என்றென்றும் நினைவில் இறுத்திக் கொள்ள வேண்டும்.

இனி, கீழுள்ள செய்திகளில் நீங்கள் கவனம் செலுத்தலாம்:

கடந்த மார்ச்சு 88-இல் இராசீவ் அரசு நெருக்கடி நிலை — திருத்தச் சட்ட வரைவை (மசோதாவை) நிறைவேற்றிய பொழுது ***தினமணி*** கீழ்வருமாறு எழுதியது. (15-3-88 ஆசிரியவுரை) (எடுத்துக் காட்டுகளைத் தினமணியின் 'தமிழ்க்கொலை' நடையிலேயே தருகிறோம்)

"இராசீவ் ஆட்சி, இந்த அரசியல் சாசனத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றினால்தான், பஞ்சாபில் மட்டுமல்லாமல் நாடு முற்றிலுமே திரண்டு வரும் எதிர்ப்பையும் கலவரங்களையும் சமாளிக்க முடியும் என்ற கருத்தில் இருப்பதாகத் தெரிகிறது. பஞ்சாபில் கூடப் பயங்கரவாதிகளின் அராஜகத்தை ஒடுக்குவதற்கு அரசிடம் ஏற்கனவே பல அதிகாரங்கள் பூர்ணமாக இருக்கின்றன. தேசியப் பாதுகாப்புச் சட்டமும் பயங்கரவாதத் தடைச் சட்டமும் இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க உதவ எல்லா அதிகாரங்களையும் அரசுக்கு வழங்கியிருக்கின்றன."

"இந்தச் சட்டங்களின்படி யாரையுமே சந்தேகத்தின் பேரில் அரசு கைது செய்து நீதி விசாரணையின்றிப் பல மாதங்கள் சிறை-

Scanned with CamScanner

யில் வைத்திருக்க முடியும். உண்மையில் இந்தச் சட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு பஞ்சாபிலும், பிற மாநிலங்களிலும் ஆயிரக்கணக்கான நபர்களைப் போலீஸ் கைது செய்து சிறையில் அடைத்து வைத்திருக்கிறது.''

''இந்த அதிகாரங்கள் மட்டும் போதாது; இன்னும் அதிக அதிகாரம் இருந்தால்தான் பஞ்சாபில் பயங்கரவாதப் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்று மத்திய அரசு கூறுவது, அதன் திறமையின்மையையே காண்பிக்கிறது. பஞ்சாபைப் பொறுத்தவரை பயங்கரவாதப் பிரச்சனை தொடர்ந்து வளர்வதற்குக் காரணம், பிரதமர் ராஜீவ் காந்தியின் அணுகுமுறையில் உள்ள கோளாறும் பாக்கிஸ்தானின் தூண்டுதலுமேயாகும் என்பதை முன்பே சுட்டிக் காட்டியிருக்கின்றோம்''

''...... இப்போது இராஜீவ் காந்தி கொண்டு வந்துள்ள அரசியல் சட்டத் திருத்த மசோதாவின் மூலம் **'உள்நாட்டுக்கலவரம்** (Internal disturbance) என்ற காரணம் அரசியல் சட்டத்தில் (352-ஆம் பிரிவு) மீண்டும் இடம் பெற்றுவிடும். இதையடுத்து பஞ்சாபில் மட்டுமின்றி நாட்டின் எந்த மாநிலத்திலும் மத்திய அரசு எமர்ஜென்ஸியைக் கொண்டுவரச் சட்டபடி வழி பிறக்கும்.''

''1975 முதல் 1977 வரை இந்திராகாந்தியின் நெருக்கடி நிலை ஆட்சியில் நேர்ந்த அனுபவங்கள் மறக்கக் கூடியவை அல்ல. அதன் கொடுமைகள் தாங்காமல் நாடே கிளர்ந்தெழுந்து, இந்திராகாந்தி மீண்டும் பொதுத் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானார்.''

''...... அன்று 1975-இல் இந்திராகாந்தி நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்த சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது பஞ்சாபில் நிலவும் பயங்கரவாதத்தாலோ அல்லது வேறு மாநிலங்களில் காணப்படும் கிளர்ச்சிகளாலோ அல்ல. அரசின் எல்லாத்துறைகளிலும் நிர்வாகச் சீர்குலைவு காரணமாக ஏற்பட்டுள்ள மக்களின் அதிருப்தியாலும், எதிர்க்கட்சிகளின் போராட்டங்களின் மூலமாகவும் இராஜீவ் காந்தி பதவி விலகக்கோரி நடத்தப்படும் இயக்கம் வலுப்பெற்று அவரது பதவியைப் பார்த்துக் கொள்ள வேண்டிய ஒரு 'நெருக்கடி நிலை' ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை!''

— **ஆசிரியவுரை 15-3-88 தினமணி**

''இ. காங்கிரஸ் கட்சிக்கு மாற்றாக ஒரு தேசிய அணி தேவைப்படுகிறது. ஊழல்களில் சிக்குண்டு தத்தளிக்கும் மத்திய அரசின் மீது மக்கள் நம்பிக்கையிழந்து வருகின்றனர் என்பதை அண்மைக் காலத் தேர்தல் முடிவுகள் தெளிவாகக் காட்டியிருக்கின்றன. ராஜீவ் காந்தியின் ஆடம்பர வாழ்க்கை முறையையும் ஏதேச்சதிகாரப்

போக்கையும் மக்கள் விரும்பவில்லை. இன்னும் சொல்லப்போனால் நாற்பதாண்டுகளுக்கு மேலாக ஒரே குடும்பத்தினரும் அவர்களுடைய நெருங்கிய உற்றார் உறவினர்களுமே நடத்திவந்த ஆட்சி மக்களுக்குச் சலித்துவிட்டது. மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். இந்தத் தருணத்தைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்வது புதிய தேசிய அணியின் பொறுப்பாகும்''

ஆசிரியவுரை. 10-8-88 **தினமணி.**

—இவ் வாசிரியவுரைப் பகுதிகளில் இராசீவின் ஆட்சிக் கொடுமைகளை மிகத் தெளிவாகத் **தினமணி** விளக்கிக் கூறியிருந்தாலும், அதன் உள் நோக்கம் என்ன என்றால், இராசீவ் பார்ப்பனர் கீழிறங்கினால், வி. பி சிங். பார்ப்பனர் மேலேற வேண்டும் என்பதேயன்றி வேறொரு இனத்தவர் மேலேறிவிடக் கூடாது என்பதுதான். ஆனாலும், அதனால் இராசீவ் பற்றிய கொடிய ஆட்சி முறைகளைக் கூறாமல் இருக்க முடியவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். முன்னர் குறிப்பிட்டது பார்ப்பன இனத்தின் உள் நோக்கம். பின்னர் கூறுவது நாட்டு நடப்பின் நேரடிப் பார்வை! இவ்விரண்டு போக்குகள்தாம் பார்ப்பனியத்தின் இரட்டைப் புனைவுகள். அதைத் **தினமணி** போலும் பச்சைப் பார்ப்பன இதழ்கள் என்றுமே களைந்து கொண்டதில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

அடுத்து, **தினமணி** கூறும் அரசியல் திறனாய்வுகளைக் காணுங்கள்! அவற்றில்தாம் இவ்வாட்சிக் கொடுமைகளின் உண்மைகள் எவ்வாறு புலப்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதையும் உணருங்கள்! அவை அதன் உள்ளுணர்வுகளை மீறி வெளிவந்த உண்மைகள்!

உருசியாவில் நடந்த இந்திய விழா பற்றி அ'து இவ்வாறு எழுதுகிறது:

''சோவியத்து உருசியாவில் நடைபெற்ற 'இந்தியத் திருவிழா' 'ஒரு கேலிக் கூத்து' என்பது 'விஷய ஞானம்' உள்ளவர்களின் கருத்து. அதற்குச் சான்றாக, இதன் நிறைவு விழா நிகழ்ச்சிகளைச் சொல்கிறார்கள் அவர்கள்...... மொத்தத்தில் 'இந்தியத் திருவிழா' என்பது, 'இந்தியன் பாப் மியூசிக்' திருவிழாவாக மாற்றப்பட்டு விட்டது. அரசோ, அதிகாரிகளோ அதுபற்றியெல்லாம் கவலைப்படாமல், 'இந்தியத் திருவிழா மாபெரும் வெற்றி' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.''

— '**தினமணிக்கதிர்**' 28-8-88

இராசீவின் வரலாற்றறிவின்மையை அது கடிந்த வகை இது:

''பிரதமர் ராஜீவ் காந்தியால் ஒரே ஒரு பழக்கத்தை மட்டும் மாற்றிக் கொள்ளவே முடியவில்லை. எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் ஏதாவது ஒரு தவறு செய்து விடுவதே அது. வாய் தவறி, வரலாற்றிற்கு மாறான எதையாவது சொல்லி விடுகிறார்

அவர். மற்றவர்கள் அந்தத் தவறைச் சுட்டிக் காட்டிய பிறகுதான், தான் செய்த தவறு அவருக்குப் புரிகிறது .... ராஜீவ் குறைந்த பட்சம் இந்திய வரலாற்றையாவது ஊன்றிக் கற்க வேண்டும்.'' என்பது பலரது அபிப்பிராயம் .... இதையெல்லாம் கேட்கை யில், பிரதமரின் 'பொது அறிவு' பற்றி சந்தேகப் படுவது நியாயந்-தானே என்றுக் கூடத் தோன்றுகிறது. இதில் இன்னொரு சிக்கல் என்னவென்றால் ராஜீவ் மாதிரியே, அவர் அமைச்சரவை சகாக்களும் இருப்பதுவே! 'தலைவர் எவ்வழி, தொண்டர் அவ்வழி' என்ற பாணியிலேயே அவர்களின் நடவடிக்கைகள் அமைகின்றன.''

ஆக, மற்றவர்களைத் தட்டிக்கேட்க ராஜீவால் முடிகிறது. ஆனால், ராஜீவைத் தட்டிக்கேட்க ஒருவரும் முன்வர முடியவில்லை. இதற்குக் காரணம், 'நாம் ஏதாவது சொல்லப்போய் ராஜீவ் நமக்குச் சீட்டுக் கிழிந்து விட்டால் ......'' என்று ஒவ்வொருவரும் பயப்படுவதே!

— டில்லிராஜா — தினமணிக்கதிர். 21-8-88

''இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜே. என். தீட்சித்தும், பிரதமரின் செயலகத்திலிருக்கும் அயலுறவுத்துறை ஆலோசகர் ரோனேன் சென்-னும் ஒரே மாதிரி கருத்துக் கொண்டவர்கள். அவர் கள் இருவருமே ''இலங்கைப் பிரச்சினையில், நமது ராணுவம் அள-வுக்கு அதிகமாகவே செயல்பட்டு விட்டது. இவ்வளவு அதிக எண்ணிக்கையில் நமது ராணுவத்தினரை 'அமைதிப்படை' என்ற பெயரில், இன்னும் எவ்வளவு நாள்தான் ஓர் அன்னிய நாட்டில் வைத்துக் கொண்டிருப்பது? அவர்களைக் கொஞ்ச நாளைக்காவது திருப்பி அழைக்க வேண்டும் என்றார்கள்.''

''ஜயவர்த்தன வேறு, 'எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் இடத்தைக் காலி செய்யுங்கள்' என்ற பாணியில் பேச ஆரம் பித்து விடுவார் போலிருக்கிறது. அதற்கான அறிகுறிகள் தென் படுகின்றன. ஆனால் சர்மாவின் கருத்துகளை வைத்துப் பார்க்கை-யில், இலங்கை அதிபர் கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும், இந்திய ராணுவம் அவ்வளவு சுலபத்தில் திரும்பாது போலிருக்கிறது.''

''அயலுறவு சம்பந்தப்பட்ட உளவுத்துறையான 'ரா' ஒரு விசித் திரமான அமைப்பு. அவர்கள் எப்போது 'புலி'களைத் தழுவிக் கொள்வார்கள், எப்போது 'புலி'களுக்கு எதிராய்ப் போவார்கள் என்று சொல்லவே முடியாது. அவர்கள் புலிகளைக் கட்டிப் பிடிப்பார்-கள்; கழுத்தையும் பிடிப்பார்கள்.''

''ராணுவத்துக்கும் அயலுறவுத் துறைக்கும் நேர்மாறான ஆலோ சனைகளைத் தந்த — தந்து கொண்டிருக்கிற 'ரா' அமைப்பின் நட வடிக்கைகள் விசித்திரமானவை மட்டுமல்ல ரகசியமானவையும் கூட!... இலங்கைப் பிரச்சினையிலும் ஏறக்குறைய இதே நிலைதான்! தேசத்தின் பாதுகாப்புக்கு வழி சொல்ல வேண்டியவர்களே தவறான

ஆலோசனை தந்தார்களென்றால், இது போன்ற சிக்கல்களில் சிக்கிக் கொள்வதைத் தவிர்க்க இந்தியாவால் இயலாது என்பதற்கு இது ஓர் உதாரணம்"

"... ராணுவம் என்ன செய்கிறதென்று அயலுறவுத் துறைக்கோ, அயலுறவுத் துறை என்ன செய்கிறது என்று ராணுவத்துக்கோ தெரிவதில்லை என்பது ஒரு முக்கிய குறைதான். இந்த இரண்டும் செய்வது, இலங்கைப் பிரச்சினையில் முக்கிய நடுவராய் இருக்கும் 'ரா' அமைப்புக்கே தெரியாது. ஆனால், இதற்குக் காரணம் இராசீவ் காந்திதான். அவர்தான் இவை அனைத்தையும் ஒருங்கிணைக்க வேண்டியவர். அவருக்கோ, வேறு எத்தனையோ குழப்பங்கள்!"

"விஸ்வநாத் சர்மா இலங்கையில் உள்ள படைத்தளபதி. அவர் இலங்கை பற்றி அதிகம் அறியாதவர். 'இலங்கை என்றால் என்ன' என்று அவர் கேட்டால்கூட ஆச்சரியப்பட்டு விடக் கூடாது. அவர்க்கு இலங்கையைப் பற்றி முழுமையாய்த் தெரியவில்லை. யாழ்ப்பாணம் — தமிழீழம் — தமிழர்கள் கொடுமைப் படுத்தப்பட்ட விதம் — 1983 படுகொலைகள் — 1987 இராசீவ் — ஜயவர்த்தன ஒப்பந்தம் — என்று எதிலுமே நேரிடையாய்ச் சம்பந்தப் படாதவர் சர்மா. அதனால்தான் இந்த விஷயத்தைப் புதிய விஷயம் போல் பார்க்கிறார் அவர்"

"வேறெந்த ராணுவத் தளபதிக்கும் இல்லாத ஒரு சிறப்பு கிருஷ்ணசாமி சுந்தர்ஜிக்கும் (இந்தியாவில் உள்ள படைத்தளபதி) இருக்கிறது. இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர். வி. யிடமும், இலங்கைக் குடியரசுத் தலைவர் ஜயவர்த்தனவிடமும் ஆக இரண்டு குடியரசுத் தலைவர்களிடமுமிருந்து வரும் ஆணைகளையும் ஏற்க வேண்டியுள்ளது"

"எக்கச்சக்கமான சிக்கல்களில் சிக்கிக் கொண்டிருப்பதால், ராஜீவ், விஸ்வநாத் சர்மா சொல்வதையும் கேட்டுக் கொள்கிறார். 'ரா' செயலாளர் ஆனந்த் வர்மா சொல்வதையும் கேட்டுக் கொள்கிறார்; கொழும்பிலிருக்கும் இந்தியத் தூதுவர் ஜே. என். தீட்சித் சொல்வதையும் கேட்டுக் கொள்கிறார்."

"ஆக, இத்தனைப்பேர் சொல்வதற்கும் மத்திய அரசு தலையாட்டி வைப்பதால்தான் குழப்பமே ஏற்படுகிறது.. மத்திய அரசின் தலைமை (இராஜீவ்) இப்படிக் குழப்பமே உருவானதாய் உருமாறி விட்டது வேதனைக்குரிய விஷயம்தான்"

— டில்லி ராஜா. "*தினமணிக்கதிர்.*" 29-8-88.

"பொதுமக்களிடையே இராசீவ் மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டு விட்டதை, ஆளுங்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

— டில்லிராஜா. கதிர் 7-8-88.

தினமணிக்கதிரில் வரும் வினு விடைப் பகுதிகளைக் கவனித்தால் அதில் ஆரியக் குறும்பு, சூழ்ச்சி, ஏகடியம், எள்ளல், இழித்தல், எக்களிப்பு, அகங்காரம், ஆணவம், பொருமை, தற்பெருமை - முதலிய உணர்வுகளைத் தமிழின் மேலும் தமிழினத்தின் மேலும், தமிழினத் தலைவர்களின் மேலும் அள்ளி வீசுவதைப் பார்க்கலாம். ஆனல் அந்த இயல்பான பார்ப்பனக் கோணங்கித்தனத்துக்கு மாருக, உண்மையான அரசியல் திறனய்வுகளையும் சிற்சில நேரங்களில் பார்க்க முடிகிறது. இந்த இரட்டைப் புனைவுதான் ஆரியத்தை நிலைப்படுத்த அவர்கள் கையாளும் தலைசிறந்த கரவு முறையாகும். கீழுள்ள சில கேள்வி விடைகளைக் கவனியுங்கள். ஒவ்வொன்றின் இறுதியிலும் அவ்வத் தினமணிக் கதிரின் வெளியீட்டுப் பக்கல்கள் குறிக்கப் பெற்றுள்ளன.

கேள்வி: ஈழச் சிக்கலில் ஒரு தெளிவான கொள்கையை இந்தியா எப்போது, எப்படி எடுக்கப் போகிறது?

விடை: இராசீவ் போன பிறகு! — (7-8 88)

கே: இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டு ஓர் ஆண்டு ஆகியும் இந்தச் சிக்கல் தீராமல் இருக்கிறதே! இதற்கு யார் காரணம்?

வி: கையெழுத்துப் போட்டவர்கள்தாம்!

கே: பிரதம மந்திரி இராஜீவ் காந்தி மக்களையெல்லாம் 21-ஆம் நூற்றுண்டுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறியுள்ளாரே, அவர் அழைத்துச் செல்லும் பாதை உங்களுக்கு எப்படித் தெரிகிறது?

வி: அவர் மட்டும் போய்ப் போய் வருவது தெரிகிறது. (14-8-88)

கே: வர வர இராசீவ் சுற்றுப் பயணம் அதிகமாகி வருகிறதே!

வி: பதவிக்காலம் முடிவதற்குள் ஓர் இடம் விடாமல் உலகத்தைச் சுற்றிப் பார்த்து விட விரும்புகிருர் போலும்! (28-8-88)

''அண்மையில் இராசீவ் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணத்துக்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு ஜம்போ ஜெட் ஏர் இண்டியா விமானங்களுக்காகப் பல விமானப் போக்குவரத்துகள் தவிர்க்கப்பட்டன. இதனுல் ஏற்பட்ட இழப்பு ஏறத்தாழ 7 கோடி உருபா ஆகும்''

— கதிர். 14-8-88.

இனி, தில்லி, சென்னைத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளின் திறனய்வு தினமணிக் கதிரில் கிழமை தவருமல் வருவதுண்டு. அதில் பார்ப்பனர் அல்லாதார் நடித்த நாடகங்கள், வேறு சில நிகழ்ச்சிகள் என்றல், மிகக் கிண்டலாக — சில பொழுது கடுமையாகத் தாக்கும்; ஆனல் சில நேரங்களில் அதே தொலைக் காட்சியை மனமார. தினமணி பாராட்டுகிறது என்றல், 'அவாளுக்காக ஏதோ அதில் ஒளி

(தொடர்ச்சி 28-ஆம் பக்கம்)

அ.ச.ஞானசம்பந்தம் அறிய வேண்டும்!

3.7.88 இரவு 10 மணிக்குச் சென்னை வானொலி நிலையம் ஏற்பாடு செய்திருந்த "நிலா முற்றம்" என்ற நிகழ்ச்சி பேரா அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள் தலைமையில் நடந்தது.

அதில், இந்நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வளர்ச்சி முழுமை பெற்றுள்ளதா? என்ற கேள்வியை வைத்துக் கொண்டு பல்வேறு அறிஞர் பெருமக்கள் பங்கேற்றுக் கருத்துரை வழங்கினர். இன்றைய பாவலர்களும், கதை கட்டுரை நாடக எழுத்தாளர் களும் இலக்கிய வளர்ச்சிக்கு முழுமை அளிக்க முயலவில்லை. அது கழக இலக்கியம் போன்று நிலைபேறு அடைய முடியாது ஓரளவு வளர்ந்துள்ளது, எழுத்தாளர்கள் தங்களை அதற்கு உரிய தகுதி உடையவர் ஆக்கிக் கொள்ளவில்லை. கலப்புத் தமிழை அவர்கள் பயன்படுத்துவது என்பன போன்ற கருத்துகள் பேச்சில் நடுவாகமாக ஊசலாடின.

இது ஒரு செய்தி போல எழுத வேண்டிய நிலை ஏற்பட்ட தற்குக் கரணியம், நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய பேரா அ.ச. ஞா. அவர்கள், கூறுதற்கு ஏற்ற பல கருத்துகளைக் கூறியது நன்றாகவே இருந்தது, அஃதாவது, தமிழ்ப் பாடல்கள் முதலியன முழுவளர்ச்சி அடைய வில்லை. அதனால் அவை கால ஓட்டத்தில் தாம் மறைந்து நாம் மறக்கத் தகுவனவாய் நின்று வற்றும் என்றெல்லாம் பேசினார்.

ஆனால், தமிழ்ச் சொற்கள் இலக்கியத்தில் பயிலும் போது பிறமொழி கலப்பது காலத்தின் இன்றியமையாகும் எனவும், சர்க்கரைப் பொங்கலில் முந்திரி முதலியன கலப்பது போலக் கலத்தல் சரியே என ஒருவர் கூறியதை வழிமொழிந் தும், பேசினார். 1. ஆங்கிலம் பிற மொழிகளின் கலப்பினால் முழுமை பெற்றது. 2. "வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே" என்ற தொல்காப்பிய நூற்பாவையும் எடுத்துக் காட்டியது ஆகிய பேச்சுகள் எம்மைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்தின. "வேலியே பயிரை மேய்கிறதே" "நிழல் நீரும் இன்னாத இன்னா தமர் நீரும் இன்னாவாம் இன்னா செயின்" என்ற குறளை நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

மறைமலை அடிகள், தேவநேயப் பாவாணர், நாட்டார், பெருஞ்சித்திரனார் போன்ற பிற நல்லுள்ளம் கொண்ட தமிழறி-ஞர்கள் கதை, பாடல், கட்டுரை எழுதும் தமிழறிஞர்— படைப் பாளிகள் தமிழைத் தூய்மையாகப் படுத்த வேண்டும் என்று பல் வேறு எடுத்துக் காட்டுகள் மூலம் அறிவுறுத்தியும் எழுதியும் வந்தனர். வ.சுப.மா. போன்ற தக்கார் தனித்தமிழை விரும்பிப் போற்றவும் இத் தக்கார் வழி வந்த அ.ச.ஞா. அவர்கள் கலப்பு, காலத் தேவை என்று மனம் துணிந்து கூறுகிறார் என்றால் அவரை என்னென்பது?

தமிழில் எழுத்துச் சீர்திருத்தம்!

- தஞ்சை நலங்கிள்ளி.

பல நூறு ஆண்டுகளாக வழக்கிழந்து வரும் தமிழெழுத்துகள் சிலவற்றை மாற்றிட (சீர்திருத்த) வேண்டுமென்ற எண்ணம் தமிழறிஞர் சிலரிடையே எழுந்துள்ளது. புழக்கத்திலிருக்கும் தமிழெழுத்துகள் மிக விரைவாக கையால் எழுதுவதற்கு ஏற்றவை. இதனை டைம்சு (Times) என்னும் அமெரிக்கக் கிழமை யிதழொன்று ஏறத்தாழ இருபத்தைந்தாண்டுகளுக்கு முன் சுட்டிக் காட்டித் தமிழெழுத்தைப் புகழ்ந்தது குறிப்பிடத் தக்கது. இன்று தமிழெழுத்துச் சீர்திருத்தத்தை விரும்புபவர்கள், ''லை'' போன்ற எழுத்துகள் எழுதுவதற்கு ஏற்றதென்றாலும், தட்டச்சுகளைப் (typewriters) பயன்படுத்தும் போது அவ்வெழுத் துகளால் சற்று சுணக்கமேற்படுகிறது என்பதனை எடுத்துக் காட்டி, ''லை'' போலும் எழுத்துகளைப் பயன்படுத்த வேண்டு மெனக் கூறுகிறார்கள். இ'து உண்மைதான். நாம் மறுப்பதற் கில்லை. மேலும், தமிழ்நலங் கருதியே இவ்வறிஞர் பலரும் தமிழ்ச் சீர்திருத்தத்தை வரவேற்கின்றனர் என்பதும் நாம் அறிந்ததே.

தமிழ்த் தட்டச்சுகள் கடந்த கால் நூற்றாண்டுகளாகவே பெருமளவில் புழக்கத்திற்கு வந்துள்ளன. இன்னும் கால் நூற்றாண் டில் தட்டச்சுகள் பெருமளவில் புழக்கமிழந்து விடுமென்பதும்,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆங்கிலம் பிற மொழிகளைக் கடன் வாங்காது தூயவாகவே இயங்க வேண்டும் என அம் மொழிக்குரிய சான்றோர் சிலர் வேண்டுவர். மேலும் அது கலப்பின்றிப் பிற எல்லா இயல்பு களையும் விளக்கும் ஆற்றல் பெறு எனப் பல அறிஞர் கூறி உள்ளனர். வடமொழி இங்கு ஊசலாடிய காலமே தொல்காப் பியம் தோன்றியிருக்க வேண்டும். அதனால் 'தமிழில் வடமொ ழிக்கண் உள்ள பெயர்ச் சொற்களைப் பயன் படுத்துங்கால் தமிழுக்கேற்ற ஒலிப்பாக்கித் தூய்மை செய்து பயன் படுத்துக' என்பதே அந்நூற்பாவின் கருத்தாம். ஆதலின் பீஷ்மர் - வீடுமர் எனவும், கஷ்டம் —கட்டம் எனவும் போன்று கழுவித் தூயதாக்- கியே கம்பர் முதலிய பெரும் பாவலர்கள் பயன் படுத்தினார்.

அறிவியற் கருத்துகளைத் தமிழாக்கம் செயற்கு, அதற்கு உரிய வல்லாருக்கு ஊக்கம் அளித்துக் கலைச் சொற்களை உண்டாக் கிப் பயன் படுத்தல்தான் சால்பாம். 'பிரஷைக் கொண்டு தந்த சுத்தி செய்து வாட்டரால், மவுத்தைக் கழுவினான்' என்று எழுதுகின்ற எளிய எழுத்தாளர்க்குத் தனித்தமிழைப் பயன் படுத்தக் கூறி அறிவுரை வழங்க இனியாகிலும் முன் வர வேண்டும், பேராசிரியர் அவர்கள்.

புலவர்- ச, சிவசங்கு,
தலைவர்- கொற்கைத் தமிழ் மன்றம்
சிறுத் தொண்ட நல்லூர் சிதம்பரனார் வட்:

அவற்றைவிடவும் ஆற்றல்மிக்க கருவிகள் பயனுக்குவருமென்பதும் நம் கருத்து. இன்று அமெரிக்காவிலும் ஐரோப்பாவின் பல நகரங்களிலும் தட்டச்சுகள் படிப்படியாக வழக்கிழந்து, அவற்றிடத்தை நுண்கணிப்பான்கள் (micro-Computer) ஏற்றுள்ளன. அமெரிக்காவில் அலுவலகங்கள் பலவும் தட்டச்சுகளைத் தள்ளிவிட்டு நுண்கணிப்பான்களையே பயன்படுத்துகின்றன. இன்னுஞ் சில வாண்டுகளில் தட்டச்சுகள் முற்றிலும் வழக்கிழந்து விடும் எனக் கருத இடமிருக்கிறது. நுண்கணிப்பான்கள் தட்டச்சுகளைவிட மிக விரைவாகவும், எளிதாகவும் செயல்படுவதுடன், இவற்றைத் தட்டச்சிட (type) மட்டுமன்றிக், கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் முதலிய கணிப்புகளுக்கும் பயன்படுத்தலாம். நுண்கணிப்பான்கள் வழி தட்டச்சிடுவதைச் '' சொற்சமைப்பு (Word-processing) என அமெரிக்கர்கள் கூறுவார்கள்.

சிறிய நுண்கணிப்பான்களின் விலை ஒரு தட்டச்சின் விலையைப் போல் ஏறத்தாழ மூன்று மடங்கிருக்கலாம். நுண்கணிப்பான்கள் அதிகமாகப் புழக்கத்திற்கு வர வர விலை மேலும், மேலும் குறைந்து வருகிறது.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நடை முறைக்கு வரும் கருவிகள், காலங்கடந்து தமிழகத்திற்கும் வரத்தான் செய்யும். இது கண் கூடு. அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்ட பெருங் கணிப்பான்கள் (mainframe computers) இன்று தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களிலும், ஆய்வுக் கூடங்களிலும், தொழிலகங்களிலும் பயன் படுத்தப்படுகின்றன, இது போல இன்னும் ஐந்து பத்தாண்டுகளில் நுண்கணிப்பான்களும் தமிழகத்தில் நுழையும். இன்னும் கால் நூற்றாண்டில் நுண்கணிப்பான்கள் தமிழில் சொற்சமைப்பு செய்ய பெரும்பான்மையாகப் பயன் படுத்தப் படுமென வகையிருக்கிறது.

நுண்கணிப்பான்கள் மிகவும் ஆற்றல் வாய்ந்தவை. ''லை'' என்று எழுதினாலும் சரி, ''லை'' என்று எழுதினாலும் சரி, நுண்கணிப்பான்களைப் பொறுத்த வரை எந்த வகை சுணக்கமுமில்லை. படபடவென்று வெகுவிரைவில் தட்டச்சிடும் ஆற்றல் மிக்கவை.

தமிழில் சொற்சமைப்பு (WordProcessing) செய்வதற்கெனத் தனிப்பட்ட நுண்கணிப்பான்களைச் செய்யவேண்டிய தேவையில்லை அமெரிக்காவிலும், சப்பானிலும் செய்யப்படும் நுண்கணிப்பான்கள் மூலம் தமிழ் எழுத்துகளையும் தட்டச்சிட முடியுமென்பதை அமெரிக்கப் பேராசிரியரொருவர் செய்து காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் செய்ய விரும்பும் அன்பர்கள் இந்நிலைகளை ஆய்ந்து பார்த்துப், பலநூறு ஆண்டுகளாகப் புழக்கத்திலிருக்கும் தமிழெழுத்துகளை இன்னும் கால்நூற்றாண்டில் வழக்கிழக்கவிருக்கும் தட்டச்சுகளைக் (typewriters) கருதி மாற்றியமைப்பது சரியா என்பதனைச் சிந்தித்து செயல்படவேண்டும்.

வாழ்க தமிழ்!

கனிச்சாறு காட்டும் இயற்கை!

(புலவர் ப. எழில்வாணன். க.மு. கல்.இ)

இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழும் வாழ்வே முழுமையான வாழ்வாகும்: அதுவே மகிழ்வான வாழ்வும் ஆகும். அதனாலன்றோ.'' இந்த உலகமே ஒரு பள்ளிக்கூடம்; இதன் இயற்கையே நான் கற்கும் பாடம்'' என்றார் தாகூர். பண்டைக் காலத்துத் தமிழக மக்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தார்கள்: அதன் பயனாய் நலத்தோடும் வளத்தோடும் வாழ்வு செழிக்க, உளம் களிக்கப் பேரின்ப வாழ்க்கை நடத்திப் பெருமை கண்டார்கள். இத்தகைய நிலையால்தான் அக்கால இலக்கியங்களில் இயற்கைப் புனைவு மிகுந்திருந்தது எனலாம்.

இலக்கியத் தரத்திற்கு இன்றியமையாததாகிய இயற்கைப் புனைவு இன்றைய இலக்கியங்களில் குறைந்திருப்பதற்குக் காரணம், இயற்கைச் சார்புகள் குறைந்தும் செயற்கைச் சார் புகள் மிகுந்தும் காணப்படும் இக்கால மக்கள் வாழ்க்கையே எனலாம்.

எனினும் செயற்கை வாழ்வுடைய இந்நூற்றாண்டில் இயற்கை வாழ்வு மேற்கொண்டவர்கள் பலர். அவர்களுள், இயற்கையின் பால் மனம் கலந்து, இன்பம் நுகர்ந்து, தாம் பெற்ற பேரின்பத்தைப் பாவடிவில் (கவிதையில்) பாருக்களித்துப் புகழ்பெற்ற பாவேந்தர் பாரதிதாசனும் ஒருவர் ஆவார்.

அவ்வாறே பாவேந்தர் வழியில் செந்தமிழ் உணர்வோடு சீரார்ந்த விழிப்போடு, சிறுத்தையின் எழுச்சியோடு, கருத்துமிழ் எழுத்தோடு, இயற்கையின் நுகர்ச்சியோடு, துன்பத்திலும் இன்பத்தோடு வாழ்ந்து புகழடைந்து வருபவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆவார்!

அவரின் '' கனிச்சாறு (மூன்றாம் தொகுதி) காட்டும் இயற்கை'' பற்றி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இயற்கை:- தலைக்கனத்தால் தன்னையே பெரியவனாய்க் கருதித் தன்னாற்றலே பேராற்றலாய் எண்ணித் தடுமாறி வீழும் மாந்தனுக்கு, உலகில் பெரியதாய் விரிந்ததாய் உள்ள வானத்தை நினை வூட்டி: '' அதனைப்பார்'' எனத் தம்பிக்குக் கூறுவது போல் அறிவுறுத்துகிறார் பாவலரேறு. மேலும் '' நமக்கு ஒளியூட்டி வாழ்வளிக்கும் கதிரவனைப் பார்: நமக்கு உயிரூட்ட நீர் அளிக்கும் முகில்கூட்டங்களைப் பார்; இரவு எனினும் இந்த வானம் உன் தலைக்கு மேலே தான் என்பதனை நினைவூட்டும் விண்மீண்களைப் பார். மூச்சுயிர்க்க வீசும் காற்றினைப்பார்: ஒளி ஊற்றினைப் பார்: இத்தனையும் கீழாக நிற்க, மேலாகி நிற்கும் நீலப் பெருவானைப் பார்'' என உணர்த்தி நம்மை இயற்கையில் ஒன்ற வைத்து விடுகிறார்.

Scanned with CamScanner

''நீலப் பெருவானம் — அதில்
நீந்தி உலாவரும் கதிவரன் பார்! - முகிற்
கோலச் சிதறல்களாம் — பல
கோடி விண்மீன்களின் கூட்டங்களாம்—தம்பி
காலப் பெருவெளி பார் — வீசுங்
காற்றினைப்பார்! ஒளி ஊற்றினைப்பார் — மிகு
சாலப் பரப்புக் கண்டாய்: - உயிர்ச்
சாற்றிலும் அத்தகு ஆற்றல் உண்டாம்- பார்
நீலப் பெருவானம்:'' (பக்கம்63)

இப்பாடல் பாவேந்தரின்,

,,எத்தனை பெரிய வானம்,
எண்ணிப்பார் உனையும் நீயே:'' என்னும் பாடலை நினைவுக்குக் கொண்டு வருகிறதன்றோ!

இயற்கை காட்டும் பாடத்தால் என்ன பயன் என்பார்க்கு

''-..- வான
வெளியினைப் போல் நெஞ்சம் விரிந்ததடா: - அட
நெஞ்சு சிலிர்த்தது பார்! '' என்கின்றார் : (பக்கம் 64)

பின்பு,

''நெஞ்சை அகல உழு - அதன்
நினைவினை வாரியெங் கெங்கும் இறை'' (பக்கம் 64)

''அறிவை ஆழப்படுத்து — அஃது
ஆக்கிய சோறென நாக்கில் படை!'' (பக்கம் 64)

''தோளைக் குன்றாய் உயர்த்து — பெருந்
தோல்விகண் டாலும் நீ, கால்வளையேல்:''
(பக்கம் 65)

என அறிவுரையும் பகர்கின்றார்; நெஞ்சையும் அகலப்படுத்துகிறார்.

அருவி :

இனி அருவி பற்றிப் பாவலரேறு, அழகுத் தமிழ்ச்சொற்கள் ஏவல் புரிய எடுத்துரைப்பதைக் காண்போம். பத்து அறுசீர் மண்டிலப் பாடல்களால் பாங்குறப் பாடியுள்ளமை அருமையோ அருமை எனலாம்:

''அருவிகள் வயிரத் தொங்கல்''2 என்பார் பாவேந்தர் மலையின் அழகையாகத் திருத்தக்கதேவர் பின்வரும் பாடலில் கூறுவார்:

''நீளருவிக் கண்ணீர்வீழ்த் தலறிவண்ணம் கரிந்துருகிக்
கோளுமுவை அன்னாற்குக் குன்றமுநின் றழுதனவே.''3

திரிகூட இராசப்பக் கவிராயரோ. ''முழங்குதிரை அருவி''4 எனக் கூறுவார்: அத்தகைய சிறப்புப் பெற்ற அருவி, பாவலரேறுவின் பாடல்களாலும் இன்னும் பற்பல சிறப்புகளைப் பெறுவதனைக் காணலாம்:

வானத்திலிருந்து சரிந்து விழுகின்ற மின்னல் போன்றது அருவி; மின்னலுக்குப் பின் இடியோசை; அதுபோல அது விழுவதனால் எழுகின்ற ஓசை; அருவி விழும் பாறையின் நிறமோ மான் நிறம்; அருவியோ மரகதப் பூச்சு; அருவியின் நிறமோ பூநிறம்; பூரிப்பதோ இயற்கை உள்ளம்; - எத்துணை சுவையான உவமைகள்;

''வானிருந்து சரிந்து வீழும்
மின்னல்போ லருவி; அந்தத்
தூ நிறத் தருவி போடும்
பேரொலி இடிபோற் கேட்கும்!
மானிறப் பாறை தன்மேல்
மரகதப் பூச்சு! அதன்மேல்
பூநிறங் கண்டு கண்டு
பூரிக்கும் இயற்கை உள்ளம்;'' (பக்கம் 71)

இனி, அருவியின் காட்சியிலே ஒரு மணவிழாவை நடத்துகிறார் பாவலரேறு: அருவியின் ஓசையே முழவோசை; தென்றல் தழுவும் அருவியே மணப்பெண்; ஒளிவீசும் கதிரவனே மணமகன்; அருவிச்சிதறலில் வளைந்து வில்போன்று காட்சி தரும் வானவில்லே மாலை; மணல்போலத் தூறுகின்ற சிறிய தூறலே மணப்பந்தல்; இத்தனை இருந்தும் விருந்தினர் இல்லையேல் சிறப்பெய்துமோ அவ்விழா? எனவே விருந்தினரையும் தவறாமல் அழைத்து (அமைத்து) விடுகிறார் பாவலரேறு: அஃதாவது பறவைக் கூட்டங்களே விருந்தினராம்; மணக்குழுவாம். விருந்தினர் என்றால் விருந்து வேண்டாமா? சுவையான விருந்தை அளிக்கின்றார்: அங்கு (அருவியில்) விழுந்தெழுந்த மீனினமே விருந்து. என்னே கற்பனை! அருமையான மணவிழாவைக் கண்ட பெருமையன்றோ நமக்கு:

அந்தச் சுவையைப் பாடலின் மூலம் பெறுவது இன்னும் சுவையன்றோ:

''மணமுழ வோசை: தென்றல்
மருவிடும் அருவிப் பெண்ணை:
தணல்வீசும் பரிதி வந்து
வானவில் மாலை சூட்டும்:
மணல்போலும் சிறிய தூறல்,
மணப்பந்தர்: பறவைக் கூட்டம்,
மணக்குழு: விருந்தெ ழுந்த
மீனினம் விருந்த வர்க்கே:'' (பக்கம்: 70)

காற்று:

''காற்றே: யான் நின்னுடலைக் காணுகிலேன்: ஆனாலும் கவினுடலைத் தோய்க்கின்றாய் நீ:'' (பக்கம்73) எனக் காற்றைப் பற்றிக் கூறும் பாவலரேறு அவர்கள் அதன் மென்மை வன்மைகளைப் பற்றியும் சிந்திக்கின்றார்:

''மென்மையினுக் கொருபொருளாய்த்
தென்றலெனும் பெயர் பெற்று,
மேலேறி வலுத்து நின்று,
வன்மையினுக் கொருபொருளாய்,
வளியாகிப் புயலாகி
வளருமுன் திறம் வியந்தேன்'' (பக்கம் 73)

எனத் தென்றலையும் புயலையும் குறிப்பிடுகின்றார்:

''மலயத் தோங்கி மதுரையில் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றல்,5

என இளங்கோவடிகளால் வண்ணிக்கப்படும் தென்றலை 'மெல்லியந் தென்றல்' (பக்கம்56) எனப் பாவலரேறு கூறுகிறார்; அத் தென்றல் மென்மை நீங்கி வன்மை எய்தும் போது எப்படி இருக்கும் என்பதை உள்ளவாறே படம்பிடிக்கின்றார்;

''ஆர்த்தது வான்புயல்: ஆர்த்தது நீள்கடல்
ஆவெனும் ஓலத் தெழுந்தது பேரலை: (பக்கம்62)

மீன்பிடி புன்மைப் படகுகளைப் பொடியாக்கி, மரக்கலங்களைச் சுக்கு நூறாக்கும் வான்புயலாம் அவ்வன் புயலின் வலிமையாம் கொடுமையை விரிவாகவே விளக்கிக் காட்டுகின்றார், சான்றுக்கு ஒன்று:

''பாய்புனல் காய்கனி பூமரம் பாவிட
பாற்கதிர் சாய்வயல் பாறுமண் மேடிட
வேய்குடில் நூறுநூ றாயிரம் தூறிட
.... ஆடிய வன்புயல்''
(பக்கம்62)

எனக் குறிப்பிடுகிறார்.

ஆறு: ''ஆறில்லா ஊருக்(கு) அழகு பாழ்!' 6 என்பது போல்'' ஆறு பற்றிப் பாடாத புலவர்க்கு அறிவு பாழ்'' எனக் கூறத்தோன்றுகிறதன்றோ ? ஏனெனில் ஆறு பற்றிப் பாடாத பெரும்புலவர், பெரும்பாவலர் யாருளர்? ஒரு நாட்டின் வளமே அங்கு ஓடும் ஆறுகளைப் பொறுத்தது. எனவேதான் நாட்டைச் சிறப்பிப்போர் ஆறுகளைப் பாட மறப்பதில்லை. தருக்கறு மறையாம் திருக்குறளில் வள்ளுவர் கூட ''வருபுனல்'' (குறள்733) என ஒருசொல்லால் அதன் உயிர்த்தன்மையைக் கூறிவிடுகிறார்: இளங்கோவடிகளார்:

''வையை என்னும் பொய்யாக் குலக்கொடி'' 7 என்றும் ''கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி''8 என்றும் முறையே வைகை, காவேரி - ஆறுகளைப் பாடுகின்றார்; கம்பரும்,

''எழுகின்ற திரையிற்றுகி
இழிகின்ற மணிநீர் யாறு'' 9 எனக் குறிப்பிடுகிறார்;

பாரதியாரும்,

"காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி" என்கிறார்.

பாவேந்தர் பாரதிதாசனும் "அழகின் சிரிப்பில்" ஆறு பற்றிப் பாடுகிறார்.

"ஒரேவகை ஆடை பூண்ட
பெரும்படை ஒழுங்காய் நின்று
சரேலெனப் பகைமேற் பாயும்
தன்மைபோல் ஆற்று வெள்ளம்" (பாடல் எண் 8)

இவர்களைத் தழுவியே பாவலரேறும்; "காவிரித்தாய்" என்னும் தலைப்பில் பத்து வெண்பாக்களால் ஒளிப்புனல் காவிரியைப் பாடி ஒண்பாப் புதையலாக அளிக்கின்றார்:

"பூவிரித்தாய்: வண்ணப் பொழில் விரித்தாய்:தென்னைத்தேன்
மாவிரித்தாய்: வாழைப் பலாவிரித்தாய்:- நாவரிக்கப்
பாவிரித்தேன்: பண்டைப் புகழ்பாடும் வண்டினம்சூழ்
காவிரித்தாய் காவிரித்தாய் என்று." (பக்கம் 59)

பூ, பொழில், தென்னை, மா, பலா, வாழை இவற்றையும் இவையெல்லாம் அடங்கிய - கா (சோலை) அதனையும் விரித்த தாலே அந்த ஆற்றினுக்குக் காவிரி என்னும் பெயரானது என்பதனை நமக்கு உணர்த்தி, அதனால்,

அக் காவிரித்தாயைப் பற்றித் தாம் பாவிரித்ததாய்ப் பாவலரேறு உரைக்கும் நயம் சிறப்பானதாகும்.

அத்தகு காவிரியின் கரைகளிலே நிகழும் இன்பக் காட்சியைப் பின்வரும் பாடலின் மூலம் நம் கண் முன்னே நிறுத்திக் களிப் பூட்டுகிறார் பாவலரேறு.

"கிளி கொஞ்சும்: வெள்ளைக் கிடை நாரை துஞ்சும்;
அளிகெஞ்சும்; அம்மலர்த்தேன் சிந்தும்: - இளிசேர்கண்
மந்தி மரம்பாயும்: மன்னுதமிழ்த் தொல்பெருமை
குந்திக் குயில்கூவுங் கோடு." (பக்கம்:59)

இயற்கை வழி அறிவுறுத்தல்:

வெறுமனே இயற்கையினைப் பற்றிப் பாடாமல், இவ்வுலக மாந்தர்க்குப் பொருள் பொதிந்த அறிவுரைகளையும் நற்கருப்பம் சாற்றினிலே தேன் கலந்தது போல ஒன்றவைத்துப் பாடுவதில் வல்லவர் பாவலரேறு அவர்கள்:

"வானப் பறவைகளே: - எழில்
வண்ண விளக்குகளே: - உயர்
மானம் பொதிந்த நல்
வாழ்க்கையினை எங்கள்
மாந்தர்க் குரைப்பீரோ?"(பக்கம் : 68) - இதில்

மானமுடைய வாழ்வை மாந்தர் மேற்கொள்ள வேண்டும்; என்பதைப் பறவைக்காட்சி மூலம் நம்நெஞ்சில் பதியவைக்கின்றூர். அவ்வாறே அவர், காட்டு விலங்குகள், பட்டுடற் பூச்சிகள், தாமரைப் பூக்குளம், தேனுண்ணும் வண்டினம், நீந்தும் நல் மீனினங்கள் - இவற்றையெல்லாம் விளித்து அவற்றின் மூலம் மாந்தர்க்கு நல்லறிவூட்டுகின்றூர்: உணர்த்துகின்றூர்: ஏன்? பல்லி, தேள், பாம்பு - போன்ற நச்சுயிர்களைக் கூட அழைத்து, மாந்தர் வாழ்வைச் சீர்படுத்த உதவுமாறு பலவகைச் சுவையோடும்,சுருக்கென மாந்தர்க்குப் படுமாறு கருத்தோடும் கூறும் பாங்கு புதுமையிலும் புதுமையாகும்.

,,பல்லி, தேள், பாம்புகளே' - தீமை
பாய்ச்சும் உயிரினங்காள்! — உங்கள்
இல்லங்கள் தப்பி, எம்
இடைவந்து வாழ்வாரை
என்றைக்கு மீட்பீரோ?'' (பக்கம் 69)

நெஞ்சிலே நஞ்சுடைய மாந்தர்கள் வாழும் இடங்கள் எவை என்பதையும், அவர்கள் நம்மிடையே தப்பி வந்து விட்டனர் என்பதையும், அவர்களை மீட்கக் கூடிய ஆற்றலுடையவை பல்லி' தேள், பாம்புகளே என்பதையும் எத்தகைய நயம் ததும்பப் பாவலரேறு பாடியுள்ளார்.

இவ்வாறு கனி சாறு காட்டும் இயற்கை, நமக்கு இயல்பான வாழ்வமைவதற்கும்,நாம் இன்பமாக வாழ்வதற்கும் ஏற்ற வழிமுறைகளைச் சுவையோடும் உணர்வோடும் செப்புகின்றது: கனிச்சாற்றை முழுமையாகப் பருகுவோமாக. என்றும் இனிமையோடு வாழ்வோமாக:

அடிக்குறிப்புகள்:

1. அழகின் சிரிப்பு - பாரதிதாசனுர் - வானம் - பாடல் ண்எ 10
2. ,, ,, ,, அருவி - ,, ,, 2
3. இயற்கை விருந்து- இரா. சாரங்கபாணி பக்கம் 61
4. திருக்குற்றலக் குறவஞ்சி - திரிகூடராசப்பக்கவிராயர்:
5. சிலப்பதிகாரம் - புறஞ்சேரியிறுத்த காதை - அடி 25
6. நல்வழி - ஔவையார் - பாடல் எண் 24
7. சிலப்பதிகாரம் - புறஞ்சேரியிறுத்த காதை - அடி 170
8. ,, - கானல்வரி - பாடல் எண் 25
9. கம்பராமாயணம் - கிட்கிந்தா காண்டம் - பாடல் எண் 912

[குறிப்பு :

பாரதிதாசன் பல்கலைக்கழகம்- திருச்சியில் சூன் 7-8-1988 இல் நடைபெற்ற அனைத்திந்தியத் தமிழ் இலக்கியக் கழகத்தின் இரண்டாம் கருத்தரங்கு மாநாட்டின் சார்பாக வெளியிடப் பெற்ற ஆய்வுக்கோவை- தொகுதி இரண்டில் இக்கட்டுரை இடம் பெற்றுள்ளது.]

Scanned with CamScanner

தமிழர் வாழ்வில் தாலி தேவையா?

- திருவாட்டி: திருமுல்லை. கோலாலம்பூர்.

தமிழ் இலக்கியங்களில் வரும் கண்ணனுக்குத் தமிழர்களின் வாழ்வியல் முறைப்படி ஒரே ஒரு துணைவி. நப்பின்னை என்று பெயர். கண்ணன் நப்பின்னைக்குத் தாலி கட்டவில்லை, (பாமா-உருக்குமணியும் யார் என்று கேட்காதீர்கள், அப்புறம் கோபியர்கள் எல்லாம் எவ்வகை உறவு என்றும் கேட்பீர்கள். ஒழுக்கக் கேடுநிறைந்த இந்துப்புராணக் கதைகள் தமிழருடையவை அல்ல. அருள்கனிந்து சிந்தியுங்கள்)

தமிழர் திருமண முறை பற்றி விரிவாகக் கூறும் சூளாமனி என்னும் நூல் தாலி கட்டுதல் பற்றி எதுவும் கூறவில்லை.

12 -ஆம் நூற்றாண்டில் கம்பன் என்ற பெரும் புலவர் தமிழரின் பண்பாட்டிற்குப் புறம்பான இராமாயணம் என்ற கதையைப் பாடலாகப் பாடிப் புகழ் பெற்றார்.

சிவதனுசு என்ற வில்லை முறித்து சீதையை மணந்த-இராமன் தாலி கட்டியதாக அவர் பாடவில்லை. இன்று தமிழ் மக்களால் கடவுள் எனப் போற்றி வணங்கப்படும் இராமனால் வஞ்சனையாகக் கொல்லப்பட்ட மாவீரன் வாலியின் மனைவி தாரை தாலியறுக்க வில்லை.

ஆனால் தசரதன் கைகேயியைப் பார்த்து "நின் கழுத்தின் நாண் உன் மகற்குக்காப்பின் நாணும்" என்று கூறுவது போல் பாடியுள்ளார், தசரதன் கட்டியது தாலியானால்- இராமன் தாலி கட்டாதது ஏன்?

கம்பன் காலத்தில்தான் தாலி கட்டும் முறை கதைகளின் வழி தமிழ் மக்களுக்கு அறிமுகமாகத் தொடங்கியிருக்கலாம்.

திருமணத்தில் கட்டிய மங்கல நாண்:

700 ஆண்டுகளுக்கு உள்பட்ட காலத்தில்தான், சிவ பெருமான் தடாதகைப் பிராட்டிக்கு மங்கல நாணைக் கழுத்தில் கட்டினார் எனப் பரஞ்சோதி முனிவர் பாடியுள்ளார். எனவே 700 ஆண்டுகளுக்கு முன்னர்தான் தாலி கட்டுவதையே - தெய்வங்களுக்கு உரிமையாக்கினர் என்பது தெரியவருகின்றது. அக்கால கட்டத்தில் கூட பார்ப்பனர்கள் தாலி கட்டவில்லை.

600 ஆண்டுகளுக்கு உள்பட்ட காலத்திலேயே திருமணத்தில் தாலி கட்டும் பழக்கம் பார்ப்பனர் நடுவில் பரவியிருக்கிறது. தெய்வங்களுக்குச் செய்து வைக்கும் சடங்குகளைப் பெறும் முதல் தகுதி அவர்களே பெற்றிருந்தனர்.

பின்னாட்களில் சத்திரியர் எனப்படும் அரசர்கள் நடுவிலும் அதன் பின்னர் வைசியர் எனப்படும் வணிகர் நடுவிலும், பரவிய பின்னர் பொதுவான மக்களாகிய சூத்திரர் நடுவிலும் இத் தாலி கட்டும் பழக்கம் ஏற்பட்டு 300 ஆண்டுகளே ஆகலாம் எனக் கணிக்கலாம்.

Scanned with CamScanner

எனவே முன் எக்காலத்தும் மணமகன் கட்டாத தாலியை-500 முதல் 300 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திற்குள் பரவிய தாலி கட்டும் வழக்கத்தைப் பன்னெடுங்காலமான வழக்கமென்றும், தாலியில் கணவனின் உயிரையும் காக்கவல்ல-மந்திர ஆற்றல் போல் ஒன்று இருப்பது போலவும், அதற்குத் தனி பூசை - தாலியே கட்டிக்கொண்டதாக வரலாறு இல்லாத தெய்-வங்களுக்குச் செய்யவேண்டும் எனவும்,இந்த மாங்கல்ய பாக்கியம் பெற திருவிளக்குப் பூசைகள் முதல் செய்ய வேண்டும் என்பதும் நகைப்பிற்கிடமாகவே ஆகின்றன.

தற்பொழுது தாலி கட்டும் முறை:

இன்றும் பழங்குடி மக்களிடையே தாலி கட்டும் வழக்கம் இல்லை. தமிழகத்தில் முகவை மாவட்டத்தைச் சேர்ந்த வைசியர்-கள் என்ற பிரிவைச் சேர்ந்த நாட்டுகோட்டைச் செட்டியார்கள் எனப்படுவோர், திருமணத்தன்று கட்டும் தாலியைக் ''கழுத்தீரு'' (கழுத்திரு) என்றும், கட்டும் நிகழ்ச்சியைத் திருப்பூட்டுதல் என்றும் வழங்குவர்,

80 ஆண்டுகளுக்கு முன்னர்வரை மணமகன் மணமகளுக்கு இத்திருவைப் பூட்டவில்லை. ஒரு கிழவரே மணமகள் கழுத்தில் அதைக் கட்டுவார். இவ்வாறு கள்ளர், மறவர், அகம்படியார் பிரிவிலும் நாத்தியே மணமகள் கழுத்தில் தாலி கட்டுவாள் ஆகவே மணமகன் கட்டும் தாலி பெருமையுடையது என்பது பல பிரிவினரிடையே தாலியின் பெருமையைக் கேள்விக்குறியாக்கும்.

இன்றும் பல பிரிவினர் திருமணத்தன்று வளையல்,தோடு,தொடரி (சங்கிலி) இவற்றையே பரிசப்பொருளாக - பழந்தமிழர் முறைப் படி அருங்கலமாக மணமகளுக்குத் தருகின்றனர், தமிழரைத் தவிர்த்துப் பிற திராவிட இனத்தாரும் இவ்வாறே நடத்து கின்றனர் என்பது ஆய்வாளரின் முடிவாகும்.

எனவே உங்கள் கொடிவழியைப் பார்த்தாலும், உங்கள்-முப்பாட்டன் முப்பாட்டிக்குத் தாலி கட்டியிருக்கமாட்டார்,உங்-கள் பாட்டன் பாட்டியின் திருமணத்தில் பார்ப்பன ஐயர் புரோ கிதம் ஓதியிருக்க மாட்டார் என்பது உறுதி. ஆனால் காட்டுத் தீப் போல் பரவி, சாதிச்சுவடையும் தாங்கி, சாதிக்கொரு தாலியாக வடிவம் பெற்றுள்ளது மூடத்தனத்திற்கு முட்டுக் கொடுப்பதாக அமைந்து விட்டது.

பெண்ணுறுப்புகள் போல் தாலி:

நமது பெண்களால் பெருமை பொருந்தியதாகக் கருதப்படும் தாலி, பெண்ணின் உடல் உறுப்புகள்போலவும் செய்யப்படுகிறது. ஓர் அம்மண(நிர்வாண)ப் பெண்ணுடலை ஒப்பாக வைத்துக்காம விருந்துக்குச் சிறப்பெனக் கருதும் உறுப்புகளை முதன்மையாக்கி வடிவமைக்கப் பெற்றுள்ள சில மாங்கல்ய அமைப்புகளைப் படத்தில் காணலாம்.

Scanned with CamScanner

தாலி ஏன் இவ்வாறு பெண்ணின் காம விருப்பத்துக்குரிய உறுப்புகளாக வடிவமைக்கப்படுகின்றன என்பதற்கு அதிக விளக்கம் தேவையில்லை. கணவன் மனைவியை அடைவது பல குறிக்கோளைக்



கொண்டதாக இருக்கலாம்; ஆனால் உடல் ஆசையை நிறைவு செய்து கொள்வது முதன்மையானது எனபதை எவர் மறக்க முடியும்? காமச்சுவைக்குத் தேவைப்படும் உறுப்புகளை அவள் செழுமையாகக் கொண்டிருக்கவேண்டும் என்ற குறிக்கோளையும் அது கொண்டிருக்கலாம்.

சிவலிங்க வடிவமைப்பு விளக்கும் மெய்ம்மத்தைப் (தத்துவத்தைப்) போல் இந்தத் தாலியின் வடிவமைப்பும் ஏன் கொண்டிருக்க முடியாது?

பெண்ணைப் நுகர்ச்சிப் பொருளாகக் கருதி, அண்ணன் தம்பி முதல் நண்பர்கள் வரை நுகர்வது (அனுபவிப்பது) இந்துமத-ஆரிய தர்மம். இதற்குப் பாஞ்சாலி ஓர் எடுத்துக்காட்டு.

இன்றுவரை ஐயர் வைத்து வைதீகத் திருமணம் செய்து கொள்ளும் நம் பெண்கள் - வீட்டிற்கு வரும் அதிதிகளுடன் உறவு கொண்டு பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள உடன்படுவதாக வேதமந்திரம் வழி உடன்படுகிறுளே.

தாந்திரீக முறை என்பது இந்து மதத்தில் ஒருவகை வழி பாட்டு முறை. அது பெண்ணை அம்மண (நிர்வாண) மாக்கி உறுப்புகளைப் பூசிப்பது ஆகும். பிறகு கூட்டமாகவே உடலுறவும் கொள்வர். இதற்கும் இந்து மதத்தில் தத்துவ விளக்கம் உண்டு. தமிழர்களின் சைவ வைணவ மதங்களில் இத்தகைய இழிவான (கேவமான) வழிபாட்டு முறைகள் இல்லை. ஆனுல் இந்து மதச் சடங்கு (சம்பிரதாயங்)களை அவியல் போல் ஏற்றுக்கொண்டு தன்னை இந்துஎனப் பெருமையோடு சொல்லிக்கொள்ளும் அறிஞர் பெருமக்கள்—கும்பமேளாவையும் — மைசூர் மாநில—ரேணுகா-தேவி—பண்டிகையையும் கொண்டு விளக்கத்தை ஏற்பார்களாக.

தமிழ் நாட்டில் உள்ள மாபெரும் கோயில்களைப் போய்ப் பார்த்தால் கோபுரமெங்கும், தூண்களெங்கும் (செக்ஸ்) பாலுறவுச் சிலைகள் இருப்பது தெரியவரும். திருப்பதி கருவறைக்கு முன்புறத்திலும் இவ்வகைச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் பத்தர்களுக்குப் பத்திவர என்று 'தத்துவ' விளக்கம் சொல்லப்படுவதை நம்புவோம் நம்புவோமாக. இதையெல்லாம் நான் குறிப்பிடுவது, தாலியின் அமைப்புக்கான விளக்கத்தை வலியுறுத்தவே அன்றி வேறில்லை.

இதுவரை குறிப்பிட்டுள்ள கருத்துகளின் வழி நாம் கீழ்க் காணும் முடிவை அணுக இயலுகின்றது.

0 தாலி என்பது வேறுபாடின்றி அனைவராலேயும் அணியப் பட்ட அணிகலனே. சிறுவர் சிறுமியர் மட்டுமின்றி விலங்குகளும் கூட அதை அணிந்திருந்தன.

0 திருமணத்தன்று தாலி மணமகளுல் காட்டப்பவில்லை.

0 கைம்பெண் தாலியறுக்கவுமில்லை.

0 அண்மைக்காலத்திலேயே திருமணத்தில் தாலி கட்டும் வழக்கம் உருவாகியுள்ளது.

0 முதலில் தெய்வங்களுக்குத் தாலி கட்டிவைத்தனர்.

0 பின்னர் பார்ப்பார் அவ்வழக்கத்தை மேற்கொண்டனர்.

0 அடுத்து உயர் சாதிக்காரர் என்போரால் இவ்வழக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

0 அவர்களைப் பின்பற்றிப் பிறரும் தாலி கட்டத் தலைப்பட்-டனர்.

0 தமிழகத்தில் பழங்குடி மக்களும், பிற மலைவாழ் மக்களும் இன்றும் தாலி கட்டும் வழக்கத்தைமேற்கொள்ள வில்லை.

0 இந்துமதத்தின் தாந்திரீகப் பிரிவின் வழி மாங்கல்யங்கள் பெண்ணின் உடல் உறுப்பைப் போலவும் செய்யப்படுகின்றன.

இன்றுள்ள தமிழர்கள்!

நூல்: தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்.
ஆசிரியர் : பர்.க. ப. அறவாணன்.
விலை : 304 பக்கம். உரு 25/-
கிடைக்குமிடம்: ஐந்திணைப் பதிப்பகம்,
282, பைகிராப்ட்சு சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5.

பெண்ணுக்குத் தந்து மணக்கும் பரிசம் ஆணுக்குத் தந்து மணக்கும் வரதட்சணையானது எப்படி?

பண்டைத் தமிழகத்தில் காதல் மணம் பெருவழக்காக இருந்தது; கற்பு மணம் சிறு வழக்காக இருந்தது. காலப்போக்கில் கற்பு மணமே முதன்மை பெற்றது. காதல் மணம் குற்றம் என்று கருதும் குறைவு மனப்பான்மை பிற்காலத்து வளர்ந்து செழித்து நிலை பெற்றது. காதல் மணமும் பண்டைய கற்பு மணமும் மேலோங்கி இருந்த காலத்தில் பெண்ணைப் பெற்ற பெற்றோர் மணமகனுக்கோ, மணமகளின் பெற்றோர்க்கோ எதுவும் தரவேண்டியிருந்ததில்லை. பெற்று, வளர்த்து, ஆளாக்கி, நெறிப்படுத்திய ஒரு பெண்ணையே மணவாளனுக்கு நல்கும் பெற்றோர், வேறு என்ன நல்கவேண்டும்? அவ்வாறு எதிர்பார்ப்பதும் இயற்கைக்கு மாறு அன்றோ?

ஆனால், பெண்ணுக்கு அவளைப் பெற்றெடுத்த பெற்றோர்க்கு நிலையாகப் பெண்ணைத் தன்னுடன் அழைத்துச் செல்லும் மணமகன் ஈடாக ஏதேனும் நல்க வேண்டுமன்றோ? அவ்வாறு நல்கும் பழக்கம் பண்டு இருந்தது. அப் பழக்கமே இன்றும் பரிசம் என்று அழைக்கப்படுகிறது. மணமகன் பெண்ணின் தாய்க்கு அளிக்கும் அன்பளிப்பைப் பால்கூலி அல்லது முலைக்கூலி என்பர். பல பழங்குடிகளிடத்தில் ஆடு, மாடு, நிலம், பொருள் ஆகிய

(முன் பக்கத் தொடர்ச்சி)

0 இந்து மதத்திலிருந்து வேற்றுமதங்களைத் தழுவியோரும், தாலி கட்டும் வழக்கத்தைக் கைவிடவில்லை.

0 தாலி, சாதிப் பிரிவைக் காட்டக்கூடிய வகையில் செய்யப்படுகின்றது: சாதியை நிலை நிறுத்தும் சழக்ககாவும் திகழ்கிறது.

0 பிற்போக்குக் கருத்தாளர்களால் கொண்டுவரப்பட்ட தாலி முறையைத் தடை செய்யவோ, ஒழிக்கவோ தமிழகத்தில் எவரும் தோன்றாது இருந்தனர்.

0 சீர்திருத்தக்காரர்கள் சமய அடிப்படையில் சாதி ஒழிப்பு போன்ற சீர்திருத்தங்களைப் பேசினாலும் கூட, பெண்ணினத்தைப் பின் தள்ளும் தாலியைப் பற்றி சிந்திக்காது வாழ்ந்தனர். தாலி மக்களிடையே நிலையான இடத்தைப் பெற்றுத் திகழ்ந்தது.

(தொடரும்.)

வற்றைப் பெண்ணின் பெற்றோர்க்கு அன்பளிப்பாகக் கொடுத்துப் பெண்ணை எடுக்கும் பழக்கம் இருந்தது. தமிழ் நாட்டுப் பழங்குடிகள் மட்டுமன்றி ஆப்பிரிக்காவில் இன்றும் இந்தப் பழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது.

இத்தகு அன்பளிப்பு முறையைத் தமிழிலக்கியத்திலும் காணுகிறோம். தலைவன் தலைவிக்கு அன்பளிப்புக் கொடுப்பதைக் கையுறை கொடுத்தல் என்பர். தலைவன் தலைவிக்கு உடை அளித்தால் அது திருமண உறுதியைக் காட்டும் என்று நம்பப் பெற்றது. அப்பழக்கம் தழையுடை தருதல் என்று போற்றப் பெற்றது.

திருமண உறுதிக்குப் பிறகு பெண்ணின் பெற்றோர்க்கு அளிக்கப் பெறும் அன்பளிப்பு, பரிசு எனப்பட்டது. இத்தகு பரிசை அகநானூறும் புறநானூறும் பேசுகின்றன.

மணமகனின் பெற்றோர் கொண்டு வரும் பரிசுப் பொருளை மணமகளின் பெற்றோர் ஏற்றால்தான் திருமணம் உறுதிபெறும். பெற்றோர் ஏற்கலாம்; ஏற்காமலும் மறுக்கலாம். பரிசுப் பொருளை மறுப்பதன் மூலம் தம் மகளைத் தரப் பெற்றோர் மறுத்து மொழிகுவர். (அகம் 90, புறம் 343).

மணமுடிக்க விரும்பும் பெண் வீட்டாருக்கு உரிய பரிசப் பொருளை நல்க ஏலாத தலைவன் மணப் பெண்ணின் குடும்பத்திற்குத் தொண்டு செய்வதன் மூலம் பரிசப் பொருள்களை ஈடுகட்டுவதுண்டு. தொண்டு வழி உழைப்பை ஈடு கட்டும் மணமகனுக்கு அவன் உழைப்பையும் பரிசப் பொருளாகக் கொண்டு தம் மகளை மணமுடித்துக் கொடுப்பர் பெற்றோர். இத்தகு தொண்டு வழி மணம் (Marriage by Service) பழங்குடி மக்களிடம் மிகப் பரவலாக இருந்தது. திராவிடப் (தமிழப்) பழங்குடி ஆய்வு இதனைத் தெளிவு படுத்துகிறது. கழகக் காலத்திலும் இப்பழக்கம் இருந்ததை அகப் பாடல் ஒன்று (280) காட்டுகிறது.

இன்றும் பண்டு இருந்த பரிச முறை பல இடங்களில் தேய்ந்து வாழுவதைக் கேட்கலாம்; காணலாம். திருமண நாளுக்கு முன்னாள் பெண்ணுக்குப் புதுக் கூறை எடுத்துக் கொடுத்துப் பரிசம் போட்டுப் பெண்ணை மணமகன் வீட்டுக்கு அல்லது திருமணம் நடக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வதைக் காணலாம். சில சமயம் திருமணத்திற்கும் எதிர்கால இல்லறத்திற்கும் போதிய பொருள் ஈட்டிய பின்பே மணம் செய்வதைக் காணலாம் என்ற கருத்துடைய மாப்பிள்ளைமார் உண்டு. அன்னோர் திருமணத்தை இடைநிறுத்திப் பொருளுக்காக அயற்புலம் பிரிந்து செல்லுவர். இதனைப் பண்டைய இலக்கண இலக்கியங்கள் 'வரைவு இடை வைத்துப் பொருள்வயின் பிரிதல்' என்று சுட்டிக் காட்டும்.

பெண்ணின் பெற்றோர்க்கு அன்னோர் தம் பெண்ணையே தருவதால், அவருக்குப் பொருள் தருதல் வேண்டும் என்பது தருக்க

நெறிக்கு உட்பட்டுப் பண்டைத் தமிழகத்து நிகழ்ந்து வந்த வழக்கம். இந்நிலை மாறிப் பெண்ணையும் கொடுத்துப், பெண்ணு டன் பொன்னையும் (சீதனம் — ஸ்ரீதனம்) அளிக்கும் பழக்கம் தமிழ் நாட்டில் வந்துள்ளது. இத் தலைகீழ்ப் பழக்கம் என்றைக்கு வந்தது? எப்படி வந்தது? யாரால் வந்தது? என்பன ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு உட்பட்டவை. இதற்குரிய விடையும் அயற்புலத்துப் பண்பாட்டுப் படையெடுப்பின் சீரழிவு ஒன்றும் துலக்கமுறும்.

தமிழர் பெண்ணுக்குத் தலைமை கொடுக்கும் தாய்வழிக் குமுகத்தினர். ஆணுக்கு அல்லது தந்தைக்குத் தலைமை கொடுக் கும் வழக்கம் ஆரியச் சார்பின வெளிப்புறத்திலிருந்து வந்தது. ஆரியக் கூட்டத்துள் ஆடவரே மிகுதியாக இருந்தனர் என்பதும், அவர் உள்நாட்டுத் திராவிடப் பெண்களோடு உறவு கொண்டா டினர் என்பதும், வேறு இடங்களில் விளக்கப்பட்டன. அனைத்து இடங்களிலும் தமக்கு உரிய தலைமையை நிலை நாட்டிக் கொண்ட ஆரியர் தாய் வழிப் பெண்ணுக்கு இருந்த தலைமையை மாற்றித் தந்தைவழி ஆணுக்குரிய தலைமையாக ஆக்கினர்.

தாய்வழிக் குமுகத்தில் சொத்து உரிமையும் சொத்து உடை மையும் பெண்ணுக்கு இருந்தன. இதனைக் கேரளம், கன்னியா- குமரி, தென் கருநாடகம் ஆகிய பகுதிகளில் அண்மைக் காலம் வரை இருந்த மருமக்கள் தாய முறை உறுதி செய்கிறது. இம் முறைப்படி சொத்து ஆண்வழிப் பிறங்கடைக்குச் செல்லாது. பெண்வழிப் பிறங்கடைக்கே செல்லும். அஃதாவது ஒரு குடும்- பத்தின் சொத்துக்கு வரும் தலைமுறையில் உரிமை கொண்டா- டக் கூடியவள் பெண்ணாகிய மகளே; ஆண் ஆகிய மகன் அல் லன். இதனை இந்தியா வந்த குறிப்பாகக் கேரள நாட்டில் பரவிய ஆரியர் கண்டு கொண்டனர்.

பண்டைய திராவிடப் போர் முறையில் தலைமைப் பங்கு ஆண்களுக்கு இருந்தது. போர் வரும்போது வீட்டுக்கு ஓர் ஆண் பிள்ளையைப் போருக்கு அனுப்பும் பழக்கமும் இருந்தது. இனக்குழு அரசர்களிடையே அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. போரில் மிகுதியாகப் பங்கேற்ற ஆடவர் இறக்க நேரிட்டது. இதனால் ஆண் — பெண் சம விழுக்காட்டு நிலை மாறுபட்டது. பெண்டிர் பலராயினர். ஆடவர் குறைவு பட்டனர். எனவே திராவிடப் பெண்களுக்குரிய மாப்பிள்ளைகளை அந்தக் குடிகளுக்- குள்ளேயே தேட முடியவில்லை. உள்மண முறை சிதைந்தது. இந்த வாய்ப்பைக் கேரளம் வந்து நிலைபெற்ற ஆரியர் மிக ஏற்- றதாகப் பயன்படுத்திக் கொண்டனர் (Anthropology in India. P. 144.)

கேரள நம்பூதிரிப் பிராமணர்கள் தமக்குப் பிறந்த ஆண் பிள்ளைகளுள் மூத்தவன் தவிர எஞ்சியோன் நம்பூதிரிக் குடும்பத் துக்குள்ளேயே பெண் எடுப்பதிலிருந்து தவிர்க்கப்பட்டனர்.

அதே சமயத்தில் நாயர் பெண்ணை மணம் முடிக்க வற்புறுத்தப் பட்டனர். இதற்கு நாயரும் எளிதாக இணங்கினர். நாயர் பெண்ணை மணந்து கொள்ளுவதால் நாயர் பெண்ணும் கிடைக்கிறாள்; அவளுக்கு உரிமையான 'ஸ்ரீதன'மும் நம்பூதிரிக்குக் கிடைக்கிறது. நம்பூதிரிக்கு இரட்டை ஊதியம்.

நம்பூதிரி இளைஞனைத் தம் பெண் மணந்து கொள்ளுவதைப் பேறு என்று கருதினர், திராவிட நாயர்கள். எனவே நம்பூதிரிக்குப் பெண் கொடுப்பதில் நாயரிடையே போட்டி ஏற்பட்டிருத்தல் கூடும். அவனை விட நான் அதிகமாக 'ஸ்ரீதனம்' தருகிறேன் என்ற நாயர் தம் போட்டியே வரதட்சணையாகப் பேர் உருக் கொண்டது.

இன்றும் வரதட்சிணை முறை தலைமை பெற்றிருப்பது பிராமணக் குடும்பங்களிலும், மருமக்கள் தாய வழியில் வந்த நாயர் குடும்பங்களிலும், நாஞ்சில் நாட்டு வேளாளர் குடும்பங்களிலுந் தான் என்பது மேற்கண்ட வரதட்சணை வரலாற்றை வற்புறுத்துகின்றது.

பிறிதொரு வகையிலும் இவ்வரதட்சணை முறையை ஆரியர் அறிமுகப்படுத்தி வளர்த்திருக்கலாம். நம்பூதிரிக் குடும்பங்களில் மூத்த ஆண்பிள்ளை தவிர ஏனைய ஆண்பிள்ளைகள் அனைவரும் நாயர் குடும்பத்தில்தான் மணம் முடிக்க வேண்டும் என்பது கட்டாய மரபாகி விட்டது. இந்நிலையில் நம்பூதிரிக் குடும்பங்களில் பிறந்தபெண்கள் போதிய ஆடவரின்றி மணமாகாமல் இருந்தனர். பெண்கள் பலராகி மூத்த ஆண்கள் சிலராகி விட்ட நம்பூதிரிக் குடும்பங்களில் உரிய மணமகன் கிடைக்கின்றபொழுது, பெண்ணை வைத்திருக்கும் பலர் போட்டி இடுவது இயல்பாகி இருத்தல் வேண்டும். நம்பூதிரியின் ஒரு மாப்பிள்ளைக்குப் பல பெண்கள் போட்டியிடுவதிலும், பெண்ணைத் தேர்வதிலும் வரதட்சணை எளிதாகத் தலைமை இடம் பெற்றிருத்தல் வேண்டும். நம்பூதிரிப் பிராமணக் குடும்பங்களில் வரதட்சணைமுறை இவ்வாறுதான் அறிமுகமாகி யிருத்தல் வேண்டும். காலப்போக்கில் ஒப்புமை கருதிப் பிற வட்டாரப் பிராமணக் குடும்பங்களுக்கும் வரதட்சணை முறை பரவி இருந்தல் வேண்டும்.

நாயர் பெண் நம்பூதிரி மாப்பிள்ளைச் சேர்க்கையால் கேரளாவில் மருமக்கள் தாயக் குடும்பங்களில் அறிமுகமானது — வரதட்சணை முறை. மருமக்கள் தாய முறையைக் கண்மூடிப் பின்பற்றி வந்த குமரிப் பகுதி நாஞ்சில் நாட்டு வேளாளர் பகுதியில் கேரளரைப் பார்த்து வரதட்சணை முறை பின்பற்றப்பட்டுப் பரவி இருத்தல் வேண்டும். குமுகாயத்தின் உயர் சாதியினராகக் கருதப் பட்ட பிராமணரிடமும் வேளாளரிடமும் பற்றிக் கொண்ட வரதட்சணை முறை காலப்போக்கில் எஞ்சிய பகுதிகளுக்கும் இனங்களுக்கும் பரவி இருத்தல் வேண்டும்.

இம்முறை ஆரியச் சார்பிலேயே தமிழரிடம் அறிமுகமாகி இருத்தல் வேண்டும் என்பதை இம் முறைக்குரிய மொழி வழக்காறுகள் எடுத்துரைக்கின்றன. மாப்பிள்ளை வரனுக்குரிய

Scanned with CamScanner

காணிக்கை என்ற பொருளில் 'வரதட்சணை' என்ற சமசுக்கிருதச் சொல் கையாளப் படுகின்றது. இதனைப் போலவே 'சீதனம்' என்ற சொல் 'ஸ்ரீதனம்' என்ற சமசுக்கிருதச் சொற்கட்டின் திரிபாகும். ஸ்ரீ என்றால் ('ஸ்திரீ') பெண். தனம் என்பது பொருள் — பெண்ணுடன் கொடுக்கப்படும் பொருள்' என்னும் பொருளில் இவ் வாரியச் சொல்லும் தமிழில் புகுந்தது. இக் கருத்தை 'முலைவிலை' பற்றிய தமிழ்ச் சொற்கள் உறுதி செய்கின்றன.

பெண்ணின் பெற்றோர்க்கு அன்பளிப்பு நல்குவதைத் தனித் தமிழ்ச் சொல்லில் பண்டைய இலக்கியங்கள் குறித்தன. பரிசு, பரிசம், முலைவிலை, முலைக்கூலி, தழைவிலை, தண் தழைவிலை, கையுறை, ஆகியன தனித்தமிழ்ச் சொற்களாக அமைந்திருப்பது அச்சொற்களுக்குரிய பழக்கம் - தனித்தமிழர் பழக்கம் - என்பதையும் காட்டுகிறது.

மாப்பிள்ளை அன்பளிப்புக்குரிய சொற்கள் 'வரதட்சணை' என்றும் 'ஸ்ரீதனம்' என்றும் சமசுக்கிருதச் சொற்களாக அமைந்து கிடப்பது, அச்சொற்களுக்குரிய பழக்கம் தமிழருடையது அன்று என்பதையும், சமற்கிருத ஆரியருடையது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

கேரளத்தைப் போன்று தமிழகத்திலும் போர்களத்தில் பங்கேற்று ஆடவர்கள் பலர் இறந்ததன் மூலம் ஆண், பெண் சமன்பாடு முரண்பட்டது. அம்முரணை விலக்கத் தமிழரிடையே சீதன வரிசை முறை தோன்றியது என்று சிலர் கூறுதல் கூடும். ஆனால், இக் கருத்து சரியன்று. காரணம் மேற்கண்ட ஆண், பெண் சமன்பாடு முரண்பட்ட நிலையில் திராவிடத் தமிழரிடையே பல மனைவி முறை அறிமுகமாகியது. ஓர் ஆடவனுக்குப் பல மனைவியர் என்று அறிமுகமானதன் மூலம் மேற்கண்ட முரண்பாடு எளிதில் தவிர்க்கப் பட்டது.

தமிழ்நாட்டில் வரதட்சணை முறை மிகுதியாகக் கட்டாயமாக இடம் பெற்றிருப்பது பிராமண குமுகத்தில் மட்டுமே என்பது கருதத்தக்கது. பெண்ணுக்குத் தலைமை குறைந்து ஆணுக்குத் தலைமை மிகுந்து ஏற்கப்படும் ஆரியக் குமுக அமைப்பைத திராவிடர் (தமிழர்) ஏற்றுக் கொண்டாலும், பிராமணரை உயர்சாதியாகக் கொண்டு, அவர்தம் வழக்கத்தை ஏற்க நினைப்பதாலும், இப்பழக்கம் தமிழ்நாட்டு உயர்சாதிகளில் பரவிற்று. பின் தங்கிய வகுப்புகளிலும், மலை வாழ் பழங்குடிகளிடமும் இத்தகு முறை அறவே இல்லை என்பதும் கருதத் தக்கது.

பெண்ணோடு பொன்னையும் பொருளையும் பெறும் வழக்கம் பார்ப்பனரிடம் இருந்தது என்பதை மனுசுமிருதி முதலான ஆரிய நூல்கள் வற்புறுத்தும். பார்ப்பனர் மண முறைகள் எட்டு: அவற்றுள் பிரமம் என்பது, பெண்ணை அணிகலன்களுடன் தானமாகக் கொள்வது. ஆரிடம் என்பது ஒன்றானும் இரண்டானும் பசுவையும் காளையையும் பெண்ணுடன் பெறுவது. (தொல்காப்பியம் இளம்பூரணர் உரை; களவியல் 89.) (தொடரும்.)

Scanned with CamScanner

தமிழ்ச் சஞ்சீவி மறைந்தார்!

பேராசிரியர், தமிழ் அறிஞர், முனைவர். ந. சஞ்சீவி கடந்த ஆகத்து 22-ஆம் பக்கல் திடுமென மாரடைப்பால் மறைந்தார் என்னும்செய்தி கேட்டு உண்மையிலேயே மிக்க வருத்தமும் பேரதிர்ச்சியும் உற்றோம். அவர்க்கு அகவை 61.

பேரா. சஞ்சீவி அவர்கள் உண்மையாகவே தமிழ்ச்சஞ்சீவியாகவே இருந்து நம் அருந்தமிழ் மொழிக்கும், இனத்துக்கும் நாட்டுக்கும, அகத்தும் புறத்தும் மெய்த்தமிழ்க் காவலராகவும், தொண்டராகவும், வழிகாட்டியாகவும் தம் இறுதிக் காலம் வரை இருந்தார்.

புதினத் தமிழ்ப் பேராசிரியர் பா. மு. வரதராசனாரின் மாணவர் இவர். தம் துணைவியாரை இழந்த பின்னும் சோர்வுறுது ஊக்கமிழக்காது அனைத்து நிலையிலும் தமக்குச் சரியென்று பட்டதை இம் மொழிக்காகவும் இனத்துக்காகவும் இறுதிவரை முழக்கி வந்தார் என்பது பெருமைப் படத்தக்கதாகும். 1972-இல் சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைமைப் பதவியைப் பெற்ற இவர் 1984-இல் ஒய்வு பெறுமுன் நம் தூய தமிழ்ப் பாவியங்களான கொய்யாக்கனியை முதுகலைச் சிறப்புத் தமிழ்க் கல்விக்கும் ஐயையை இளங்கலைக்கும் பாடநூல்களாக்கிப் பெருமை பெற்றார். இதுவே இவர் கொண்ட தூயத்தமிழ்ப் பற்றுக்குரிய சான்றாகும்.

பொதுமைக் கருத்தும் அதே பொழுது தமிழ் மெய்ப்பொருளியல் கருத்தும் ஒருங்கே கொண்ட இவர் தம் மறைவு நாள் வரை தமிழின முன்னேற்றத்திற்கு என தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதியை முன்னோடியாகவும் தம் அரசியல் தலைவராவும் ஏற்று, அவருடைய நன் மதிப்பையும் பாராட்டையும் பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் மறைவால் துன்புறும் உண்மைத் தமிழ்நெஞ்சங்களுக்கும், அவரைப் பிரிந்து நிற்கும் அவர் ஒரே மகளுக்கும், மருமகனார்க்கும் உற்றார்-உறவினர்க்கும் நம் ஆழ்ந்த வருத்தமும் ஆறுதலும் உரிய' வாகுக.

— ஆசிரியர்

வெளிவந்துவிட்டது!

'பாவலரேறு' அவர்களின்

செயலும் செயல்திறனும்

அரிய வாழ்வியல் நூல்!

424 பக்கங்கள் விலை 35 உருபா

பதிவுக் கொடுப்பு (Recorded Delivery) அஞ்சலில் பெற விரும்புவோர் 40 உருபா அனுப்புக!

, தென்மொழி, சென்னை-5.

Scanned with CamScanner

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரப்பப் பட்டிருக்க வேண்டும். அவ்வாறு பாராட்டுப் பெற்ற ஒரு செய்தியையும் அதைப் பற்றித் திறனாய்வு செய்யும் தோரணையையும் பாருங்கள்;

"பாரத தேசத்தின் கலாச்சாரப் பொக்கிஷமான. சம்ஸ்க்ருத மொழிக்கு பெருமை சேர்க்கும் வகையில் அவ்வப்போது சில நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் இடம் பெற்று வருகின்றன. 2-8-88 செவ்வாயன்று காலைதேசிய ஒளிபரப்பில் 'ஸம்ஸ்க்ருதி' என்ற தலைப்பில் ஒருவர் ராகத்தோடு மலர்களைப் பற்றிய ஸ்லோகங்களைச் சொன்னார். அது போலவே இரண்டாம் அலைவரிசையில் 29-7-88 அன்று இடம் பெற்ற 'ரத்ன தீபிகா' நிகழ்ச்சியும் குறிப்பிடத் தக்கது. ஜனாதிபதி பரிசு பெற்ற பி. ஆர். வைத்தியநாதனை அவரது சமஸ்கிருத சாதனைகள் குறித்துப் பேட்டி கண்டார் பி. டி. ஸ்ரீனிவாச ராகவாச்சாரியார். தம்மிடம் பயில்பவர்களில் கிறிஸ்தவ மாணவர்களும், முஸ்லீம் மாணவர்களும் சம்ஸ்கிருதம் வாசிப்பவர்கள் என்ற வகையில் விசேஷமாகச் சொல்லப்பட வேண்டியவர்கள் என வைத்யநாதன் தெரிவித்தது கவனிக்கத் தக்கது. 'சரளசமஸ்க்ருதம்' என்ற தலைப்பில் சம்ஸ்கிருதப் பேச்சுப் பயிற்சி வகுப்பு நடத்தினார் கணபதி ராமச்சந்திரன். சம்ஸ்க்ருதம் இவ்வளவு சுலபமான மொழியா என்ற ஆச்சரியம் ஏற்பட்டது. 'கணபதி' ராமச்சந்திரன் போட்டிருப்பது ஒரு நல்ல 'பிள்ளையார்' சுழி. தொடர்ந்து இது போன்ற சம்ஸ்கிருத வகுப்புகளை டி. வி. யில் நடத்தலாமே!"

— 14-8-88.

— என எழுதுகிறது தினமணி. ஆனால், அதே சமயத்தில் **தமிழ்மொழியைப் பற்றிய பின்னணியில், அதன்மேல் பற்றும், அதன் முன்னேற்ற முயற்சிகளும் மிகுந்து வருவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத பொறாமை உணர்வாலும் எரிச்சலாலும், அதையும், திராவிடர் கழகக் கொள்கையையும் உள்ளடக்கி, இணைத்து முடிச்சுப் போட்டு மதப் பித்தம் கொண்ட, ஆனால் மொழியுணர்வே அற்ற பொதுமக்களிடம், ஏதோ இவர்களுக்குத்தான் உண்மையறிவு கிளர்ந்தெழக் கூடிய வாய்ப்பிருப்பதாகக் கருதிக்கொண்டு, அறிஞர் சிவராமனுக்குப் பின்னர், தலைகொழுத்த ஐராவதம் மகாதேவன் ஆசிரியராகப் பொறுப்பேற்றிருக்கும் தினமணி எழுதுவதைப் பாருங்கள்;**

"கடவுள் இல்லை, இல்லை, இல்லவேயில்லை' என்று கூவும் (நல்ல வேளை 'கூவும்' என்ற சொல்லைப் போட்டாவது தம் எரிச்சலைப் புலப்படுத்தியிருக்கிறார்.) 'பகுத்தறிவாளர்' கடவுளுக்குப் பதிலாக மொழியை வழிபடும்) வழிபடுகிறார்களாமே!) விந்தையையும் காணுகிறோம்." (கல்லையும் செம்பையும் வழிபடுவதை விட மொழியை வழிபடுவது அறியாமையன்று; கல்வி-

லும், செம்பிலும் கடவுள் உண்டென்றால், மொழியில் மட்டும் கடவுள் இல்லை என்று இவர் எப்படிச் சொல்கிறாரோ, நமக்குத் தெரியவில்லை. ஒரு வேளை சமசுக்கிருதம் மட்டுமே தெய்வமொழி, அதில் தான் கடவுள் உண்டு, தமிழ் சூத்திரமொழி, அதில் கடவுள் இல்லை — என்பதைக் கூறாமல் கூறுகிறாரோ ஐராவதம்; இனி, இதற்கு மேலும் அவர் கூறுகிற பாணியையும் வயிற்றெரிச்சலையும் கவனியுங்கள்.)

''என் மொழிதான் உலகிலேயே பழையது, என் மொழிதான் எல்லா மொழிகளிலும் இனியது என்ற சிறுபிள்ளைத் தனமான வாதங்களில் அவர்களுடைய பகுத்தறிவின் ஆழமின்மை வெளிப்பட்டு விடுகிறது''' (அடடா, என்ன மொழியறிவு! 'என்மொழி பழையது, இனியது' என்று சொல்வது சிறுபிள்ளைத்தனமான 'வாதமாம்'! சமசுக்கிருதத்தை இவர்கள் இப்படியெல்லாம் உயர்த்திச் சொல்லும் பொழுது அ'து அறிவாளித்தனமான, பெரும் பிள்ளைத்தனமான வாதமோ? உண்மையாக இருப்பதை அப்படிச் சொல்வதில் என்ன குற்றம்? ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்!'' — என்று இவர் தாத்தா பூணூல் பாரதி சொன்னாரே, அதுவும் சிறுபிள்ளைத் தனமானதுதானோ? — என்று இவர் சமசுக்கிருதத்தைப் பொறுத்த அளவில், இல்லாததை இட்டுக்கட்டிச் சொல்லும் குதிரைக் கொம்புத் தனமான 'வாதம்' இல்லையே இது! தமிழை ஆய்வதற்கு மட்டுமே 'பகுத்தறிவின்' ஆழமின்மையைக் கண்டு கொள்ளும், இவ் வெள்ளைக் கொம்பன் யானை (1) ''சமசுக்கிருதம் இறைவனைப் போலும் அநாதி! இன்னுஞ் சொன்னால் இறைவனுக்கே முன்னர் தோன்றியது.'' என்று புளுகையிலும், இன்னும் இவர்களின் இராமாயண, மாபாரத, வேத புராண, ஆரிய தர்மப் புரட்டல் கதைகளிலும் கருத்துகளிலும் பகுத்தறிவு ஆய்வு செய்வதில்லையே, அது ஏன்? அப்படிச் செய்தால் மட்டும் வயிற்றில் புளியைக் கரைக்கிறதோ, மகாதேவனுக்கு — ? இனி, இன்னும் அவர் எக்களித்து வெளிப்படுத்திய மெய்ப்பொருள் கருத்துகளைக் கவனித்துக் கேளுங்கள்.)

''மொழிகளின் மூலத்தைக் கண்டறிந்தவர் யாருமில்லை'' (ஏன் கடவுளின் மூலத்தையே கண்டறிந்து கூறிய உர (!) மண்டைகளுக்கு, மொழியின் மூலத்தை — அதுவும் தமிழ் மொழியின் மூலத்தை — மட்டும் கண்டறிந்து கூறும்போது, அதை முடியாது என்று பொதுவுண்மை — பொது ஞாயம் — பேசுவானேன்? எனக்கு இல்லையென்றால், உனக்கு மட்டும் இருப்பானேன் — என்னும், 'ஒரு பிள்ளை இரட்டைத்தாய்' வழக்காட்டு முடிவோ — இது?

இனி, மேலும் அவர் காட்டும் பார்ப்பன ஞாயத்தைக் கேளுங்கள்.

''எவருக்கும் தத்தம் தாய்மொழி இனித்து ஒலிப்பது இயற்கையே...'' (காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு என்னும்

பிள்ளைப் பாச ஞாயத்தை இதிலும் புகுத்தும் கரவாண்மையையும் காரறிவையும் பாருங்கள்! தமிழைச் சொல்லும் பொழுதுதான் இவ்வாறான இயற்கை அளவுக்கோலைக் கொண்டு அளக்கலாம் என்பது! சமசுக்கிருதத்தைப் பற்றிப் பேசுகையில் அது, செவ்வாய்க்கு மேல், நெப்டியூனுக்குமேல், யுரேனசுக்குமேல், இனி அனைத்துக்கும் மேலே மேலே மேலே உள்ள ''தேவலோகத்து (!)' மொழியோன்னோ!'' என்று மயற்கை 'ஞானம்' (!) பேசுவது! இத்தகைய பச்சைப் பார்ப்பனீய 'விதண்டா வாத தர்க்க ஞாயம்' நம்ம வாளுக்கெல்லாம் தெரியாதோ? — இனி படியுங்கள்...)

'' ...... என்ற உண்மைகளை ஏற்றுக் கொண்டால், மொழியின் அடிப்படையில் மக்களைப் பிரிக்கும் சூழ்ச்சிகளிலிருந்து தப்பி விடலாம்!'' (எப்படி...க் கூறுகிறார், ஐராவதம் மகா ... மகா. தேவனார் பார்த்தீர்களோ? ... மொழியின் அடிப்படையில் மக்களைப் பிரிக்கிறார்களாம். இவர் ... இந்த மகா ... மகா ... தேவ (யோக்கியர்) சொல்லுகிறார். இஃது என்ன? ... வருண ஆச்ரம பிறவிமூல — அடிப்படையில் பிரிக்கும் பார்ப்பன வாத'ப் பச்சைப் புரட்டல் சூழ்ச்சியை விடத் தாழ்வானதோ, இழிவானதோ, ஏமாற்றுத் தனமானதோ, அல்லது முட்டாள்தன மானதோ இல்லையே! அதை ஏற்று இன்றைக்கும் இந்த மகா தேவன்கள் ஒப்புக் கொண்டு,

'பிராமணோஸிய முக மாஸீத்:' என்று ரிக்வேத மந்திரத்தைக் கூறுவதில்லையோ? அதை விட இந்தப் ''பாஷா அபிமான விஷேஸ விருத்தாத்தம்'' 'பாபமான கார்யமாமோ?'

இனி, இதற்கு மேலும் இவ் ''வேதாந்த சித் பவானந்த மந்த்ர மூர்த்தி மகாதேவ ரிஷி புங்கவர் (!) நமக்கு வரலாற்றுப் பாடத்தையும் ஓதிக் காட்டுகிறார்.

''ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நம் நாட்டில் சிறந்து விளங்கிய சிந்து வெளிச் சமுதாயத்திலும், பற்பல (எந்தப் பற்பலவோ ... நமக்குத் தெரியவில்லை!) இனத்தவர் கலந்தே வாழ்ந்தனர் என்று அக்காலத்திய எலும்புக் கூடுகளை ஆராய்ந்த அறிவியலாளர் கூறுகின்றனர். இமயத்தைத் தாண்டியும் கடலைக் கடந்தும் நம் நாட்டில் வந்து குடியேறின மக்களின் ரத்தம் ... (இங்கு இமயத்தைத் தாண்டியவர் ஆரியர் என்பதாகவும், கடலைக் கடந்தவர் (கடைந்தவர் இல்லை!) திராவிடர் என்பதாகவும், வரலாற்றாசிரியர் ஒரு சாரார் கூறும் கருத்தை ஏற்றுச் சோற்றுக்குள் சொக்கலிங்கத்தை மறைத்து, விழுங்கச் சொல்லும் 'வித்தை' காட்டுகிறார் இந்திர யானை(!)யார். 'மேலே' படியுங்கள் ...) பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பழங்குடியினரின் ரத்தத்துடன் ஒன்று கலந்து ஒரே சமுதாயத்தைத் தோற்றுவித்து விட்டது என்பது அறிவியல் கூறும் உண்மையாகும்.' (எந்த அறிவியல் ...? வா. செ. குழந்தைசாமி கூறும் அறிவியலோ? இருக்கும் இருக்கும்! தாம் கற்ற நீரியல் (Hydrology)

அறிவியலை விட்டு விட்டு மொழியியல் அறிவியலுக்குள் புகுந்து, குன்றுமுட்டிய குருவியாய்த் தமிழ் எழுத்து மாற்றம் பற்றிக் கத்-திக் கத்திக் கால வெள்ளத்துள் மற்றவர்களைப் போல் கரைந்து போகாமல், அதன் வழி, தாம் ஒரு கலங்கரை விளக்கமாக என்றென்றைக்கும் சுடர் விடக் கணக்கண்டு கொண்டிருக்கும் குழந்தைசாமிகள் (!) ஆதரவு பெற்ற மலை விழுங்கி மகாதேவன்-கள் மொழியியல், வரலாற்றியல், இனவியல் ஆய்வுகளுக்கு மட்டும் அறிவியல் அறிவியல் என்று காது கனலக் கதறிப் புலம்புவானேன்? இப்படிக் கனலும் போதாவது அவர் தம் உடம்புப் பூணூலைக் கழற்றி வைத்துவிட்டுக் கதறினால் நல்லது. அவ்வாறு கழற்றி வைத்திருப்பார் என்று கருதுகிறேன். ஆனால், உண்மை என்னவென்று தெரியாதே! சரி இன்னும் அவர் கூற விரும்பும் முடிவின் கருத்தைப் பாருங்கள்.)

'' ... இன்றைய இந்தியாவில் ஆரியருமில்லை, திராவிடரு-மில்லை. திராவிடம், தமிழினம், வன்னியர், அன்னியர் போன்ற இனவாத, ஜாதி அபிமானக் கொள்கைகள் வேரூன்றினால் நம் நாடு ஒரு சிதறு தேங்காய் ஆகிவிடும்.'' (ஆஃகா! எத்தனைக் கரிசனம் இந்தப் பிராமணப் புங்கவர்க்கு! 'கரிசனம் கட்டிக் கொண்டு அழுகிறது; கட்டுச்சோறு புட்டுக் கொண்டு அழுகிறது' - என்பார்கள்! நம் நாடு சிதறு தேங்காய் ஆகிவிடுமாம்! இவர் தாம் அதைச் சிதறாமல் சிந்தாமல் புளிவைத்து ஒட்டவைத்து, ஒருமைப் பாட்டை வளர்த்து, அதில் பார்ப்பனப் பயிரை முதலா-ளிய எரு விட்டு வளர்க்கப் பார்க்கிறார். ஆரியருமில்லையாம்; திராவிடருமில்லையாம்; பிராமணர் மட்டும் இருப்பாரோ? அவர்-கள் சூத்திரர்களை மட்டும் ஆட்டுக்கல் மாதிரி ஆட்டிக் கசக்கிப் பிழிந்து சாறெடுப்பார்களோ? இவரும் இவரைப் போன்ற-வர்களும் இவர்களின் சான்றிதழ்களில் பிராமணர் என்று பதிந்து கொள்ளவில்லையோ? பிராமணர் என்றால் யார்? ஆரியப் பார்ப்ப-னர்தாமே! அப்புறம் ஆரியரும் இல்லை, - திராவிடரும் இல்லை - என்றால் என்ன பொருள்? வெறும் எழுத்தழகுக்கு - உலகத்துக்கு அப்படிக் கூவிக் கொண்டு, உள்ளத்துக்குள், உயிருக்குள் ஆரிய ராய்க் கரைந்து நிற்கும் ஐராவதம்தான் சொல்லுகிறது, ஆரியரா வது, திராவிடராவது, இதை இவர் அசிரியராக இருந்து நடத்தும் தினமணிக் கூட்ட வெளியீட்டிலேயே வரலாறாகக் கூறி யிருக்கிறாரே! அந்த வரலாறு மறைந்து விட்டது என்கிறாரா, இவர்? கீழே படியுங்கள். அந்த உண்மைகளை அவரால் மறைக்க முடியவில்லை பாருங்கள். (பார்க்க. தினமணிக்கதிர் 27-8-88 இந்திய நாகரிகம்.)

''கி.மு. 2000ஆண்டு முதற்கொண்டு, ஈரானிலிருந்து, ஆரியர் என்னும் இனத்தினர், அலைஅலையாக வடகிழக்கு இந்தியாவில் குடிபெயரலாயினர்.''

''ஆரியர்கள், சிந்து சமவெளியில் வேரூன்றியிருந்த திராவிட நாகரிகத்துக்குப் பதிலாகத் தங்களுடைய நாகரிகத்தை நிறுவி.

Scanned with CamScanner

னர்; பிற்பாடு, இந்தியாவின் பிற பகுதிகளையும் வெற்றி காண லாயினர்,'' (ஆரிய ஆளுமை தலையெடுத்த செய்தி.)

''தோல் நிறத்தின் அடிப்படையிலான வர்ணாஸ்ரம முறை' யையும் அவர்கள்தான் ஏற்படுத்தினர்.''

''முதலில் கறுத்த நிறமுடைய உள்நாட்டு மக்களிடமிருந்து (இந்த இடத்தில் திராவிடர் தமிழர் - என்ற இனச் சொல் பயன் படுத்தப் பெறவில்லை. மறைக்கப் படுகிறது.) தங்களை வேறு படுத்திக் கொள்வதற்காக ஏற்படுத்திக் கொண்ட இந்த வர்ணாஸ் ரம முறை, பிற்பாடு ஆரியர்கள் கலப்பு மணம் செய்து கொள்ள ஆரம்பித்தபோது, நிறபேதங்களுக்குப் பதிலாக, சமூகத்தில் தனி மனிதனின் அந்தஸ்தையும், அவன் வாரிசுகளின் இடத்தையும் நிர்ணயிப்பதாக அமைந்தது.''

''கி.மு. 1000 முதல் 500 வரையிலான காலகட்டத்தில், ஹிந்து சமூகத்துக்கான அடித்தளம் நிறுவப்பட்டு விட்டது.'' (ஆரியப் பார்ப்பன இனமே 'இந்து சமூகம்' என்று மறைத்துக் குறிக்கப் பெறுகிறது.)

''கங்கை வெளியிலும் நகரங்கள் பெருக, பழைய பூர்வீகக் குடிகளின் (இங்கும் திராவிடர்கள் - தமிழர்கள் - என்ற சொல் பயன் படுத்தப் பெறாமல் மறைக்கப் பெறுகிறது.) பழக்க வழக்கங்கள் கைவிடப் பட்டன.'' (அஃதாவது ஆரிய ஆளுமை மேலோக்கம் பெறுவதை இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.)

''இனத்தலைவர்கள் (அஃதாவது ஆரியத் தலைவர்கள்) அர-சர்களாக அதிகாரம் பெற்று, ராஜ பரம்பரையை நிறுவினர்.''

''குருமார்கள் (அஃதாவது ஆரியப் புரோகிதர்களை இவ்வாறு நாகரிகமாகக் குருமார்கள் என்று மறைத்துப் பேசுகிறார்கள்) — 'சமூகம் வகுப்பு வாரியாக (அஃதாவது வர்ணாச்ரமப் பிரிவாக) பிரிக்கப் பட்டது. கடவுளின் ஆணைப்படித்தான்' (அஃதாவது, பிரமனே அவ்வாறு பிறப்பித்தான் என்னும் ஏமாற்று) என்று சொல்லி, அரசர்களுக்கு உதவியாய் இருந்தனர்.'' (அஃதாவது அரசர்களை ஆட்டிப் படைத்தனர். அதற்குக் கருவிகளாக மந்திர தந்திரங்களையும் தங்கள் இனப் பெண்களையும் பயன்படுத்தினர்.)

''ஒரு ஹிந்து, தான் பிறந்த சாதியிலிருந்து சாவின் மூலமே தப்பிக்க முடியும். ஒரு மனிதன் செய்யும் தொழில், அவன் திருமணம் செய்யும் பெண், உணவைப் பகிர்ந்து கொள்ளும் நபர்கள் - எல்லாமே ஜாதி அடிப்படையில்தான் வரையறுக்கப் பட்டன.''

- இனி, இக்கருத்துகளின் அடிப்படையில் நடந்த அரசியல் குமுகாய மாற்றங்களைக் கீழ்வருமாறு தினமணிக்கதிரில் (4-8-88 - இந்திய நாகரிகம்) குறிப்பிடுகிறார், அதன் ஆசிரியர்.

''மன்னர்களுக்கும் புரோகிதர்களுக்குமிடையே இருந்த பிணைப்பு காரணமாக (என்ன 'வெங்காயப்' பிணைப்பு - அரசர்-களைப் பெண்களை வைத்து ஏமாற்றிப் பெற்றுக்கொண்ட

Scanned with CamScanner

தொடர்பை - இவ்வாறு நாகரிகமான சொல்லால் பிணைப்பு என்று எழுதுகிறது, தினமணி.) ...கோயில்கள் பல இடங்களில் ஏராளமாக நிறுவப்பட்டன. இந்து மதத்தில் இரு பிரிவுகளைச் சார்ந்த வைஷ்ணவர்களுக்கும், சைவர்களுக்கும் இடையே இருந்த போட்டி காரணமாகக் கோயில்கள் ஆடம்பரமாகவும், செல்வச் செழிப்புள்ளதாகவும் அமைக்கப் பட்டன.'' (இங்கே கவனியுங்கள். இந்து மதத்தின் இரு பிரிவுகளாம் சைவமும் வைணவமும். என்ன அண்டப்புளுகு! சைவமும் வைணவமும் தோன்றியிருந்த பொழுது 'இந்து' என்னும் ஒரு சொல்லோ, இனமோ, மதமோ எங்குமே இருந்ததில்லை. பிராமணர்கள், வேதமதம் - என்பனவே வரலாற்றில் இருக்கக் காண்கிறோம். வரலாற்று அடிப்படையில்லாத அந்தச் சொல்லை, என்றும் உள்ள வரலாற்றுடன் எவ்வளவு தந்திரமாக இணைத்துப் பேசுகிறது 'தினமணி', என்று பார்த்துக் கொள்ளுங்கள். இனி, மேலும் படியுங்கள்.)

''கோயில் ஒரு சக்தி வாய்ந்த ஒரு நிறுவனமாயிற்று. அதன் செல்வத்தைக் கொண்டு வணிக முயற்சிகள் கல்வி, மற்றும் கட்டடக்கலை உட்பட்ட கலைகள் ஆகியவை மீது ஆதிக்கம் ஏற்பட்டது.'' (அஃதாவது அனைத்தும் ஆரியச் சார்பாக மாற்றப் பட்டதை இவ்வாறு கூறுகிறது தினமணி!)

''பொதுவாக மேற்குடி மக்களே செல்வத்தை அனுபவித்தனர். கலை, பண்பாடுகளுக்கு அவர்களே உறைவிடமாக இருந்தனர்''. (இங்கு 'மேற்குடி' என்பது ஆரியப் பார்ப்பனரை; உறைவிடமாக இருந்தது, அவற்றை வைத்து ஏமாற்றிப் பிழைத்ததை.)

''அவர்களுடைய சுய பாதுகாப்புக்காக, கடுமையான சாதிப் பிரிவு பேதங்கள் அமலாக்கப்பட்டன.''

வரலாற்றில் ஆரிய வல்லாண்மை ஏற்பட்டதையும், அதற்கு மதமும், சாதிகளும் பயன்படுத்திக் கொள்ளப் பட்டதையும், எவ்வளவு நயமாகவும் நாகரிகமாகவும் கூறி வரலாற்றையே மாற்றி எழுதத் தினமணிக் கூட்டம் முற்பட்டுள்ளதை அன்பர்கள் கவனிக்க வேண்டும். ஆனாலும் உண்மையை மறைக்க முடியாமலும், மறுக்க முடியாமலும் வெளிப்படுத்த வேண்டியுள்ள நிலையிலும், மிகக் கரவாகவும், கயமைத்தனமாகவும் இதைத் தினமணியின் படித்த கூட்டம் செய்து வருவதைத் தமிழர்கள் எச்சரிக்கையாக இருந்து, (அவர்களைப் போல் விரகுத்தனமாகவும் வஞ்சகமாகவும் அன்று, ஒற்றுமையாகவும், கண்டிப்பாகவும் இருந்து) இவ்வின நல முன்னேற்றத்தை இந்த நூற்றாண்டிற்குள்ளேயே செய்து கொள்ளுமாறு எச்சரித்துக் கூறுகின்றோம்.

அதற்காகவே, இவ்வளவு நாள் பொறுத்திருந்து இதை இக்கால் எடுத்துக் காட்டுகிறோம். ஒன்றை, இறுதியாகச் சொல்லுகிறோம். 'தினமணி' 'துக்ளக்' கூட்டங்கள் 'நன்மை' என்று சொல்வது தமிழர்களுக்குத் 'தீமை' தருவதாகவும், 'தீமை' என்று சொல்வது நன்மைதருவதாகவுமே இருக்கும் என்பதைக் கல்லில் செதுக்கி வைத்துக் கொள்ளுங்கள்.

0

(4-ஆம் அட்டை பக்கத் தொடர்ச்சி)

தென்மொழி இதழினால் பயன் ஏதும் விளையவில்லை என்றும் கூற முடியாது. இன மொழியுணர்ச்சி அற்று, ஏமாற்று, அரசியல் காரர்கள் பின்னும், திரைப்பட நடிக - நடிகையர் பின்னும் சென்று கொண்டிருக்கிற மக்களிடையே புரட்சிக் கருத்துகள் கொண்ட ஒரு சிலர் உள்ளனர் என்றால் அது தங்கள் தொண்டால் விளைந்த பயன்தான்! தங்கள் எழுத்தின் மூலம் மக்கள் சாய்கால் பெற்ற தலைவன் ஒருவன் உருவானால் அவனால் இந்நிலம் விடுதலைபெறும். தங்களன்புள்ள.

-- உ. காளிமுத்து. சென்னை. 78.

○ : 1312 : அன்பு கெழீஇய ஐயா, தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு —இவை வளர, வாழ, நீங்கள் வாழ்ந்தாக வேண்டும். உங்களை வாழ்த்துவதன்றி வேறு வகையறியா ஏழையேன்.

—புலவர். தமிழ்மாறன், அம்மன்புரம்.

○ : 1313 : தனித்தமிழ் இயக்கம் அணையா வண்ணம் காத்து வரும் கொள்கைக் குன்றே! பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களே! ... தூய உள்ளத்துடனும் பொதுமையுடனும் நீங்கள் ஆற்றிவரும் கொள்கைப் பணி நிறைவேற காலம் நெருங்கி விட்டது எனக்கருதுகின்றேன்.

- பூங்குன்றன், அரச்சலூர்.

○ : 1314 : அன்புள்ள ஐயா, அவர்களுக்கு, வணக்கம். தாங்கள் தென்மொழியில் குறிப்பிட்டிருப்பதை நான் அறியாதவன் அல்லன். தோழர்கள் முகவர்கள் சிலரால் தாங்கள் மனம் தளர வேண்டாம். தொடர்ந்து தென்மொழி, தமிழ்நிலம் வெளியிடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு அன்புத் தமிழ்மகன் — இரா. அன்பு, பம்பாய்.

○ : 1315 : பேரன்புப் பெருந்தகையே! வணக்கம் ஐயா, தென்மொழி. சுவடி 24.ஓலை6. கிடைக்கப் பெற்றேன், படித்தேன். தங்களுக்கு ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலையை எண்ணி வருந்தினேன். இந்நிலைக்குக் கரணியமான அரசின்மீது அடங்காச் சினம் கொண்டேன். தாளிகைகளை விற்றத் தொகையை நிலுவையாக வைத்துக் கொண்டு, தங்களின் மனத்தை உடையச்செய்த அன்பர்கள் அனைவரையும் மனதிற்குள்ளேயே திட்டித் தீர்த்தேன். சினம், கவலை, ஏக்கம் முதலிய உணர்வலைகளால் தாக்கப்பட்டுத் தவித்தேன். இன்னும் தவித்துக் கொண்டே இருக்கிறேன். தாளிகைகள் நிறுத்தப்பட்டுத், தங்களின் தமிழின விடுதலைத் தொண்டும் நின்று விட்டால், இந்த எதுமற்ற ஏதிலித்தமிழர்களை ஈடேற்றுவோர் யார்? இதை எண்ண எண்ண நெஞ்சம் வெடித்து விடும் போலிருக்கிறதே! வெடிக்கவும் மாட்டேன் என்கிறதே!

''பெரியாருக்குப்பின் தமிழினக் காவலர் யார்?'' என்ற எனது ஏக்கம் தங்களால் தீர்ந்தது. இன்றைய தங்கள் நிலை மீண்டும் அந்த ஏக்கத்தை உண்டாக்கிவிட்டது. இனி என் ஏக்கம் தீராது.

ஏக்கத்தோடுதான் இறப்பேன். ஏக்கம் தீர்ந்து மனநிறைவோடு இறக்கமாட்டேன். வணக்கம்.

— பாவலர் - சின்னப்பனார், கொம்மக்கோவில்3

○ : 1316 : பேரன்பின் பெருந்தகை ஐயா, வணக்கம் பல. நம் இயக்கத்தூண்கள் பலரும் அடாவடித் தனமாகத் தளைப்படுத்தப்பட்ட செய்தியறிந்து, பதை பதைத்துக் கொண்டிருக்கையில், தென்மொழி இதழில் வந்த தங்களின் ஆசிரிய உரையினைக் கண்டு மிகவும் வருந்தினேன். இதழ்கள் நடத்துவதால் ஏற்படும் இழப்புகள் பற்றியும் முகவர்கள், நண்பர்கள் விடுக்காமல் இருக்கும் நிலுவைத் தொகை பற்றியும் அறிந்து திடுக்கிட்டேன்! இத்தனை இழப்புகளையும் தாங்கிக் கொண்டு, மூன்று இதழ்களை நடத்துவது என்பது வியப்பானதே!

உண்மைத் தொண்டுள்ளங்களிடம் உதவும் வகையில் செல்வ நிலையில்லை. செல்வ மிக்காரோ அதை எவ்வகையில் பெருக்கித் தங்கள் மனைவி மக்களுக்குச் சேர்த்து வைக்கலாம் என்று எண்ணுகின்றனர். அல்லது கோவில் குளங்களுக்கு வாரி இறைக்கின்றனர். அப்படிப்பட்டவர்களுள் சிலரேனும் தங்களின் தொண்டுக்கு உதவுவார்களேயானால் எவ்வளவு உதவியாக இருக்கும்? என்ன செய்வது? மொழி, இனத்தொண்டுக்குத் துணை நின்றால் அவர்களுக்குப் பேரும், புகழும், பெருவாய்ப்பும், கிடைக்குமா என்ன?

எவ்வகை இழப்புமின்றி இன, மொழித் தொண்டு செய்ய மிகுந்த வாய்ப்புள்ள ஆசிரியர்கள், அறிஞர்கள் போன்றோர் உணர்ச்சியற்ற மரக்கட்டைகளாக வாழ்கின்றனர். எடுத்துச் சொன்னாலும் அவர்கள் மண்டையில் ஏறுவதில்லையே! தம் கையொப்பத்தைக் கூட தாய்மொழியில் போட மறுப்பவர்களை என்னென்பது? இவர்களின் செயல் வெட்கப்படவேண்டிய ஒன்று.

இந்த நேரத்தில் ஓர் உண்மையினை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம் இதழ்களை உடனுக்குடன் விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் தமிழர்கள் மிகக் குறைவே. எடுத்துக்காட்டாக எனக்கு வருகின்ற இதழ்களில் (மூன்று இதழ்களிலும் பப்பத்து) சிலவற்றை நண்பர்களிடம் கொடுத்து அவர்கள் கொடுக்கும்போது பணம் பெற்றுக் கொள்வேன். பெரும்பாலான இதழ்கள் எப்படியேனும் கொள்கை பரவட்டுமே என்ற நிலையில் சில அன்பர்களுக்கும் நூலகத்திற்கும் கொடுத்து விடுகிறேன். இப்படித்தான் ஐந்தாறு ஆண்டுகளாக இதழ்கள் பரவுவதற்காக முயற்சி செய்தும தக்க பயன் கிட்டவில்லை. இருப்பினும் ஊக்கம் தளராது இயன்ற வகையிலெல்லாம் கொள்கை பரவ முயன்று வருகிறேன்.

எப்படியாவது இதழ்களுக்கான பட்டியல் தொகையினைக் கூடுமான விரைவில் அனுப்பி வருகிறேன். என் ஆர்வத்திற்கு ஏற்றவகையில் இன்னும் அதிகமாக உழைக்கவும் உதவவும் முடியவில்லையே என்றுதான் வருந்துகிறேன். இன்னும் முயற்சி செய்வேன். மற்ற நம் அன்பர்களுக்கும் இந்த நிலைதான்! இருப்பினும்

அவர்கள் இப்படி — மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் — நிலுவையை அதிகமாக்கிக் கொண்டு இதழ்கள் வளர்ச்சிக்குத் தடையாக இருக்க வேண்டியதில்லை. அன்பர்கள் சிந்தித்துச் செயல்படுவார்களாக! ஐயாவின் கொள்கை வெற்றிபெற தமிழன்னை அருள் புரிவாளாக! தங்கள் வழிநிற்கும்

அன்புத் தொண்டன், சித்தலைச்சாத்தன், உ. செல்லூர்.

1317 : அன்பு நிறை தென்மொழி ஐயா, வணக்கம். நலம் : மே விளைக. தென்மொழியை நிறுத்தும் நினைப்பு பற்றிப் பெரிதும் வருந்துகிறேன். தொடர்ந்து வர என்னால் இயன்ற உதவியினைச் செய்ய விரும்புகிறேன். இதனைப் பரப்பும் பொருட்டுப் பிறரிடம் காட்டிப் படிக்கச் சொல்கிறேன். இக்காலம், களப்பிரர் காலத்தைவிடத் தமிழ்க்கு இருண்ட காலம் என்றே எண்ணுகிறேன். இருப்பினும், தங்கள் போன்ற நெஞ்சுரம் கொண்டோர் கலங்காது நிற்பது கண்டு, மகிழ்கிறேன்.

அய்யா, 1964-ஆம் ஆண்டு, நான், 7-ஆம் வகுப்பு முடிந்த மாணவப் பருவத்தில் உங்களைக் கடலூரில் — இல்லத்தில் சந்தித்ததிலிருந்து,தென்மொழிக்கும், தமிழ்ச்சிட்டுக்கும் என்னாலியன்ற சிறு தொண்டினைச் செய்து வருகிறேன். மாணவர்களிடம் தனித்தமிழினையும், தமிழ்ச்சிட்டினையும் ஓரளவு பரப்பி வருகிறேன். ஆசிரியர்களிடம் இயலவில்லை. ஏறத்தாழ 25 ஆண்டுகள் தங்களோடு தொடர்பு கொண்டுள்ளதே என் வாழ்வின் பெரும்பேறு. ஆனால் "அகலாது அணுகாது" உள்ளேன். நம்மை இத்தொலைவு பிரித்தாலும், உணர்வு பிரிக்காது — பிரியாது. இதற்குப் பின்னால் தங்களுடன் அணுகினோர் என்ன பயன் கருதியோ, பிரிந்தது மட்டும் அல்லாமல், வீடணப் பிரகலாத, பக்தவச்சல, — மூப்பன்களாகப் பணியாற்றுகின்றனர். இது பற்றி நாம் கவலுறத் தேவையில்லை. இம்மண்ணின் இயல்பு! எதனையும் தாங்கும் நெஞ்சமாக இனியும் செயல்படுவோம். அண்மையில் நமக்கு நேர்ந்த பேரின்னல் நினைந்து வருந்துகிறேன். என்னையும் சிலர், இங்கு உசாவினர். ஆனால் எந்த இன்னலும் கொடுக்கவில்லை. தமிழகத்தில் படித்தோர் மட்டும் — இன்றேல், தமிழாசிரியர்களேனும் தென்மொழி — தமிழ்ச்சிட்டு — தமிழ்நிலம் படித்தாலே போதும்." படிக்காதவர்களே!" மேல் என்ற மொழி முற்றிலும் இம்மண்ணில் உண்மையாக உள்ளது. "கூற்று உடன்று மேல் வரினும்" நாம் கலங்காது நிற்போம்! வெல்க தமிழ்! வினையாற்றுவோம்! அன்பு நிறை,

— மு. ஆறுமுகம், சாத்தனூர்.

○ : 1318 : பேரன்புடையீர்!

வணக்கம். இன்று என் வாழ்நாளில் குறிப்பிடத்தக்க, ஒருபேறு பெற்ற நாள் (22-8-88) என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்களே எழுதிக் கையொப்பமிட்ட மடல் இன்று எனக்குக் கிடைக்கப் பெற்றதையே குறிப்பிடுகின்றேன்.

Scanned with CamScanner

சென்ற 'தென்மொழி' வாயிலாக, வம்பர்கள் சிலரின்மேல் வழக்குத் தொடுக்க வேண்டிய நிலையில் இருப்பதாக அறிந்தேன். ஐயா, தங்கள் கொள்கைப் பணியில் குறுக்கிடும் இம்மாதிரிச் சில்லறைத் தனங்களைப் பொருட்படுத்த வேண்டாம் என்றும் இச்சில்லறைகளை அம்பலப் படுத்துவதில் தங்கள் மதிப்பரிய ஒரு விநாடியையேனும் செலவிட வேண்டாம் என்றும், ஒரு காசையேனும் வீணுக்க வேண்டாம் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றேன். யானை பெருமிதத்தோடு செல்லும்போது, நாய்களின் குரைப்பைப் பொருட்படுத்துவதில்லையன்றோ!

தங்கள் பேரறிவுச் சுடரில் இருந்து, சிதறிய சிறு பொறி நான்; எனது கூற்றை மழலையின் மிழற்றல் என்றே கொள்க. அன்பே அடிப்படை. ஊழிக்காலத்தின் அழிவே வந்து தலைமீது விழுகின்ற போதும், கொள்கை உருக்குலையாத நெடுங்குன்றமே! நீவீர்வாழ்க! வெற்றி விரைவில்.

அன்பன்,

— பூங்குன்றன், அரச்சலூர்.

○ : 1319 : அன்புமிக்க ஐயா, வணக்கம். நலம் நலங்காண ஆவல். 31-8-88 முதல் 2-9-88 ஆகிய மூன்று நாள்களிலும், ஏரல் கொற்கைத் தமிழ்மன்றத்தில் நடந்த ஆண்டு விழாவிலும், குறும்பூர் தந்தை பெரியார் படிப்பகத்தார் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்திலும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் கலந்து கொண்டு உரையாற்றிய நிகழ்ச்சி மிகச் சிறப்பாக இருந்தது. 1-9-88-இல் நடந்த கொற்கைத் தமிழ் மன்றத்தில் பாவலரேறு ஐயா அவர்கள் மெய்ப்பொருள் பற்றிப் பேசிய பேச்சுகள் உள்ளத்தைக் கவர்ந்து இன்பந்தந்தன. இந்த ஏற்பாட்டைச் செய்த பெரும் புலவர் திருவாளர். சிவசங்கு அவர்களுக்கு அனைவரும் நன்றியைத் தெரிவித்துப் பாராட்டுகளையும் தெரிவிக்க வேண்டும். அவர்களுடைய இம்முயற்சியை எவ்வகைச் சொற்களைக் கூறிப் பாராட்டினாலும் தகும். ஏரல் மக்கள் மட்டும் அல்லர்; நெல்லை மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் மற்றும் ஏனைய பல ஊர்களிலிருந்தும் அறிஞர்களும், இளைஞர்களும், பொதுமக்களும், சிறுவர் சிறுமியர்களும் விழாவில் கலந்து கொண்டனர். ஐயா அவர்களின் பேச்சைக் கேட்டு ஆடாமல் அசையாமல் உரை முடியும்வரைக்கும் மூச்சு விடுவது கூடக் கேட்கும்படி மிக மிக அமைதியாக இருந்த பாங்கினை எண்ணும் போது தமிழ்மொழியின் இன்பத்தைக் கல்லா மக்களும் கேட்கமுடியும் என்பதை என் கண்ணால் கண்டு வியந்தே போனேன். தூயதமிழ் பொதுமக்களுக்கு விளங்காது என்று சொல்லும் சொல் தவறு என்பதை அன்று இரண்டே முக்கால் மணிநேரப் பேச்சே — ஐயா பேசிய பேச்சே — தமிழ் என்று உணரவைத்து விட்டது. மிகைப்படுத்தி எழுதுவதாக எவரும் எண்ணிவிடல் கூடாது. அங்கு வந்தவர்களிடம் கேட்டால் அந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறுவர். ஐயா அவர்கள் முகம் போற்றிப் (முகஸ்துதி) பேசுவதையும், தகுதி இல்லாத் திறமைகளை ஏற்றிக் கூறுவதையும் தகுதியற்றவர் பெறும்

Scanned with CamScanner

பட்டத்தையும் மதிக்காதவர்கள். அவர்களோடு என்னைப் போன்று பழகியவர்களுக்கும் அதே குணமே, மேலாகும். எனவே உண்மையாகவே நான் நுகர்ந்த, கண்ட காட்சிகளை இம்மடலில் எழுதுகிறேன். நான் கண்ட இன்பத்தை வெளியில் கூறாமல் இருக்க முடியவில்லை. எனவே மெய்ம்மையை எழுதுகிறேன். புலவர். சிவசங்கு அவர்களைப் போன்று தமிழ்க்காவலர்கள் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை அழைத்து மக்களிடம் பேச வைத்தால் கலவைத்தமிழ் கலங்கி ஓடும்.

அன்புள்ள, — அதியமான், தாழையூற்று.

அன்பர்களுக்கு ஒரு தெரிவிப்பு.

கடந்த பதினைந்தாண்டுக் காலமாக ஆசிரியர் குடியிருந்த சென்னை, திருவல்லிக்கேணி பகுதியிலிருந்து திருமயிலை சென்னை, மயிலா(ர்)ப்பூர் பகுதிக்கு வீடு மாற்றம் செய்த அந்தப் பேரிடர்ப் பாட்டாலும், அச்சகப் பணியாளர் சரிவர அமையாததாலும், வேறு இயல்பான முகவர்கள் வழியான தொல்லைகள் மிகுதிப் பாட்டாலும் — சென்ற மாதம் வெளிவர வேண்டிய தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்கள் மிகக் காலந்தாழ்ந்து இக்கால் வெளிவர வேண்டியுள்ளன என்பதை மிகவும் மன வருத்தத்துடனும், ஆற்றாமையுடனும் தெரிவித்துக் கொள்கிறோம். அன்பர்கள் மிக-வும் மனங்கனிந்து பொறுத்துக் கொள்ள வேண்டுகிறோம். இப்-பொழுதுள்ள இடர்கள் நீங்கும் வரையில் தொடர்ந்து இந்நிலையே நீடிக்கும் என்பதையும் முன்னறிவிப்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆசிரியரின் புதிய இல்ல முகவரி :
12, துவாரகை குடியிருப்பு, திரு. வி. க. சாலை, மயிலா(ர்)ப்பூர், சென்னை-4.

தென்மொழி அச்சகமும், தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்-நிலம் இதழ்கள் வெளியீட்டகமும், பழைய 5, அருணாசலத்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 — என்ற முன்னைய முகவரியிலேயே இயங்கும்.

— அமைச்சர்.

'ஞான பீட' பரிசு!

இந்திய மொழிஇலக்கியத்திற்கு வழங்கப்படும் உயரிய பரிசு 'ஞான பீட விருது' ஆகும். ஆண்டு தோறும் இந்தப் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப் படும், நூலாசிரியர்க்கு ஒன்றரை இலக்கம் பரிசுப் பணமாக வழங்கப்படும்.

கடந்த 22 ஆண்டுகளில், இந்தி, கன்னட மொழி எழுத்தாளர்களுக்கு 4 முறையும், வங்காளி, மலையாள மொழி எழுத்தாளர்களுக்கு 3 முறையும், குசராத்தி, ஒரியா மொழி எழுத்தாளர்களுக்கு 2 முறையும், அசாம், மராட்டி, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு, உருது ஆகிய மொழி எழுத்தாளர்களுக்கு ஒரு முறையும், இப்பரிசு வழங்கப் பட்டிருக்கிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

கலைச்சொல்லாக்கக் கருத்தரங்கம் -- செப்டம்பர் 8, 1988.

"அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் செப்டம்பர் 8ஆம் பக்கல் 'கலைச்சொல்லாக்கம்' என்னும் பொருளில் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கின் தொடக்கத்தில் முனைவர் பட்ட ஆய்வாளர் திரு. ஒப்பிலா. மதிவாணன் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். கருத்தரங்கினைத் தமிழ்த்துறைத் தலைவர், கலைமாமணி, தமிழாகரர், பா். ஆறு. அழகப்பன் அவர்கள் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்கள்: ஆராய்ச்சி மாணவர்கள் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரை படித்தார்கள்."

இக்கருத்தரங்கம் நான்கு அமர்வுகளாக நடைபெற்றது. முதல் அமர்வுக்குப் பதிப்புச் செம்மல் திரு. ச. மெய்யப்பன் அவர்கள் தலைமை ஏற்றார். வளர்ந்துவரும் அறிவியல் தமிழுக்குக் கலைச்சொல்லாக்கத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தினார்.

ஆட்சித்துறைக் கலைச்சொற்கள் உருவாக்கமும் பயன்பாடும் என்ற தலைப்பில் கட்டுரை வழங்கிய திரு.ஒப்பிலா. மதிவாணன், ஆட்சித்துறையில் மொழி வளர்ச்சிக்குச் சொற்சுருக்கம் தேவை என்பதை வலியுறுத்தியதோடு, கலைச்சொற்களை உருவாக்குவதற்கு சில அரிய கொள்கைகளை வகைப்படுத்திக் காட்டினார்.

வேதியியல் துறையில் கலைச்சொல்லாக்கம் பற்றிப் பேசிய செல்வி சீ. சாந்தா, தாய்மொழிக் கல்வியின் தேவையையும், இத்துறையில் கலைச்சொல்லாக்க அணுகுமுறைகள் குறித்தும், எடுத்துக்காட்டினார். அவரின் ஆய்வு முடிவுகள் வேதியல் துறையின் கலைச்சொல்லாக்க வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் வகையில் அமைந்தன.

அடுத்துப் பேசிய திரு.அரிசங்கர், திருக்குறள் கலைச்சொல்லாக்கத்தில் கடலாக விளங்குகிறது என்பதைத் தக்கச் சான்றுகளோடு எடுத்துக் காட்டினார்.

இரண்டாம் அமர்வுக்கு பா். துரை பட்டாபிராமன் தலைமை ஏற்றார். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அறிவியல் பணியாற்றி வரும் கலைக்கதிரின் கலைச்சொல்லாக்க அணுகுமுறைகளை வகைப்படுத்திக் காட்டினார், மணிவண்ணன்.

இரண்டாவதாகப் பேசிய தி. சிவக்குமார், தொழில்நுட்பத் துறையில் கலைச்சொல்லாக்கத்தைத் தரப்படுத்துதல் எவ்வாறு என்பதைப் பல்வேறு சான்றுகள் காட்டிப் பேசினார். சொல் உருவாக்கத்தின்போது கவனிக்க வேண்டிய பண்புகளையும் விளக்கினார்.

பொருளியல் துறையில் கலைச்சொல்லாக்கத்தின் பங்கு குறித்துப் பேசிய செல்வி சு. வசந்தா, பொருளியல் துறை என்பதைச் சிக்கனவியல் துறை என்று அழைப்பதுதான் பொருத்தமுடையது என்றார்.

Scanned with CamScanner

மூன்றும் அமர்வுக்கு பா். ஆனந்த நடராசன் தலைமை ஏற்றார். ஒப்பிலக்கியத்தில் கலைச்சொற்கள் என்ற பொருளில் பேசிய செல்வி பெ. காளியானந்தம்,ஒப்பிலக்கியத்தின் தோற்றத்தையும், தேவையையும் கோட்பாடுகளையும் வகைப்படுத்தினார்.

நிலைத்திணை (தாவர)இயல் துறையில் கலைச்சொற்கள் என்னும் தலைப்பில் செல்வி மா. சிவபாக்கியம் பேசினார். இவர் தமது கட்டுரையில் இத்துறையில் கலைச்சொற்களைத் தரப்படுத்தல், உருவாக்கத்தில் உள்ள சிக்கல்கள் குறித்துப் பேசினார், கலைச்சொல் மக்களைச் சென்றடைய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நான்காம் அமர்வுக்கு பா். ப. தங்கராசு தலைமை ஏற்றார்: மருந்தியல் கலைச்சொற்கள் பற்றிப் பேசிய சி. செல்வக்குமார், அத்துறையின் சொல்லாக்க முறைகளை வகைப்படுத்தினார். மேலும், திரு.இரா. கிருட்டிணமூர்த்தி, இரா. மாசிலாமணி ஆகியோரும் கட்டுரை படித்தனர். கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய ஆய்வாளர்களுக்கு மணிவாசகர் நூலகத்தின் சார்பில் பா். ஆறு. அழகப்பன் அவர்கள், 'பாரதியார் கவிதைகள்' நூலினை அன்பளிப்பாக அளித்ததோடு, சான்றிதழ்களும் வழங்கிப் பாராட்டினார். இறுதியாகக் கருத்தரங்க அமைப்பாளர் திரு. வ. தென்கோவன் நன்றி கூறினார். 0

களையெடுக்க வேண்டும்.

-- பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு.

களை யெடுக்க வேண்டும் ! — நம்மிடைக்
களை யெடுக்க வேண்டும் !

மக்களுக்கு நன்மை செய்யா ஆட்சியை
மலிவாய் நினைக்கும் அரசியல் கட்சியைச்
சிக்கலைத் தோற்று வித்தே நம்மைச்
சீரழிக் கின்ற சிறுமையர் தம்மைக் (களை)

மேடைகள் போட்டு முழக்கி மக்களின்
மேன்மைக் குழைப்பதாய்க் கூறும் எத்தரை
ஆடையில் தூய்மையைக் காட்டி வருகிற
அகத்தில் அழுக்கு நிறைந்த கயவரைக் (களை)

காசுக்கு மலந்தின்று கயமை செய்தினத்தைக்
காட்டிக் கொடுக்கின்ற எட்டப்பர், வீடணர்
மாசு படிந்திந்த மண்ணை யடகு
வைக்க நினைக்கும் வஞ்சகர் தம்மைக் (களை)

கூனிக் குறுகிக் கொத்தடிமை செய்து
குலப்புகழ் தன்னைக் கெடுக்கும் கோழைகள்
ஏனிங் குலவ வேண்டும் மோழைகள்?
என்பயன்? நமக்க வரால்மிக இழிவே ! (களை)

Scanned with CamScanner

''நல்ல மாந்தனுக்கு ஒரு சொல், நல்ல மாட்டுக்கு ஓர் அடி''. நம்முடைய செயல்கள் ஒவ்வொன்றும் தோட்டத்தில் மலரும் பூக்களாக இருக்கட்டும். குப்பைத்தொட்டியில் நெளியும் புழுக்களாக மாறக்கூடாது.

நிலத்தியல்பான் நீர்திரிந்தற்றாகும், அன்றோ? என்செய்வது? காலத்தின் கோலம். அறிவின் ஒண்சுடரே! குப்பைத் தொட்டியில் எலும்பைக் கடித்துக் கொண்டிருக்கும் குட்டிநாய்க்கன்று, மலர்த்தோட்டத்தில் அலர்ந்து மணக்கும் பூக்களுக்காக, தும்பியே நீ பாடு! குயிலே நீ பாடு! மயிலே நீ ஆடு! மானே நீ ஓடு! இதழ்களைத் தொடர்ந்து நடத்துங்கள்! தென்மொழி, தமிழ்ச்சிட்டு தமிழ்நிலம் இதழ்களை 10+10+10, என்ற முறையில் என்முகவரிக்கு அனுப்பி வையுங்கள். இதனையும் நான் ''இன்றைய நிலையில்'' செய்யவில்லை என்றால் என்னைப் பெற்றவள் தமிழச்சியல்லள். நானும் தமிழனல்லன். களிப்புறுக கவலற்க. அன்பு.

— அருள்மணி, வெங்காலூர். 46.

ஒ: 1309: இன்பத் தமிழ்மொழியின் ஈடிலாக் காவலரே! வணக்கம். தாங்கள் நலமே வாழ என் நல்வாழ்த்துகள். தென்மொழியில் தங்களின் புண்பட்டு நொந்த உளத்தினைக் கண்டேன்; வருத்தமும் கவலையும் மிகவும் கொண்டேன்.

அன்று அன்னை மொழி காக்க, வளர - செழிக்க அருந்தொண்டாற்றினர். இன்றோ தம் வயிறு வளர்க்கவும் - கட்சி - சாதி இவற்றிற்காகவும் பெருந் தொண்டாற்றி வருகின்றனர். கொள்கைக்காக மொழிகாக்க இனம் பேண — விடுதலை பெற நீங்கள் ஒருவர்தாம் இறுதிவரை உறுதியாகப் போராடி வருகின்றீர்கள். பண்டைத் தமிழ் வரலாற்றையும், இலக்கணச் சிறப்பையும் உணர்ந்து தெளிந்தவர்கள் - இன்றைய அவலநிலையைப் போக்கவே அரும்பாடு படல் வேண்டும். அந்த உணர்வைப் பல முறை பாடல்கள், உரைகள் இவற்றின் வாயிலாக உணர்த்தித் தான் வருகின்றீர்கள். ஆனால் இங்குள்ள நம் இனத்தவர்கள் செவி சாய்க்க மறுக்கின்றனர். அதனால், உங்கள் தொண்டு பயனற்ற தொண்டு என எண்ண வேண்டா. மொழி - இனம் - நாடு மானம் காக்க நீங்கள் ஆற்றும் தொண்டு தொடரவே வேண்டும். இல்லையெனின் கொஞ்ச நஞ்ச உணர்வும் மங்கிப் போய்விடும். என்னால் இயன்றதனைத்தும் செய்வேன். தொடரட்டும் உங்கள் அரும் பெரும் முயற்சியும் - தொண்டும். இன்னணம், உங்கள் பேராண்மையையும், தொண்டையும் போற்றி மகிழும்,

அன்பின் -- மு. தமிழ்நெஞ்சன், இடங்கண்ணி.

ஒ: 1310: அன்பொடு - பண்பும், அறிவொடு - எதையும் மக்களுக்கெனப் பயன்கொளும் தூய நல் தொண்டுள்ளமும் - மறத்தொடு - கொண்ட கொள்கையில் மயிரிழையேனும் நெகிழா உரநெஞ்சுமும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஐயா பாவலரேறு அவர்களுக்கு என் அன்பான வணக்கம். ஐயா, அதட்டலும் அச்சுறுத்தலும் அடக்கு முறையும் புடைசூழ ஆட்சியாளர்கள் உலா வர, நம் அன்பர்களில் பெரும்பாலோர் புறமுதுகு காட்டி விட்டார்கள். விழுப்புண் பெற்ற வீரர்களையோ விரல்விட்டு எண்ணி விடலாம். பார்ப்போம், நம் புறநானூறுதான் பொய்த்தா விடும்? தங்களுக்கு எங்கள் பகுதியில் நிலவும் நிலைமைகள் தெரிந்து இருக்கலாம். என்றாலும் மற்றவர்கள் போல் நாங்கள் நம் இனமீட்பு இதழ்களை அனுப்ப வேண்டாம் எனக் கூறும் அறிவற்றவர்களல்லர்.

ஐயா, தங்கள் முயற்சியின் பேரளவும், தாங்கள் எவ்வளவு துன்ப துயரங்களுக்கு நடுவே முவ்விதழ்களையும் அறிவுப் பயன்

Scanned with CamScanner

கருதி நடத்தி. வருகின்றீர்கள் என்பதும் எம்மைப் போன்ற அன்பர்கள் அறியாதனவல்ல. தங்கள் முயற்சிக்கு அன்பர்கள் சிலரின் வேண்டாத தேவையற்ற செயற்பாடுகள் பெருந்தடையாகிப் போனதை எம்மைப் போன்றவர்கள் உணராமலில்லை. எனவே, என் அறிவிற்கும் மனத்திற்கும் பட்ட ஒரு சிறு கருத்தை பேரறிவின் முன் வைக்கிறேன்.

நம் முவ்விதழ்களையும் நிறுத்த வேண்டாம். அதற்குப் பகரமாகத் ''தமிழ்நிலம்'' எனும் நம் கிழமை இதழை 'இருகிழமை' இதழாக, இப்பொழுது இருக்கும் அளவை விட, சிறிது - பெரியதாகவும் - பக்கங்களை அதிகப்படுத்தியும், சிறுவர் (தமிழ்ச்சிட்டு)க்கான பக்கங்களோடும், இலக்கிய(தென்மொழி)த்திற்கான பக்கங்களோடும், அரசியல், பொருளியல், அன்றாடச் சிக்கல்களைக் குறித்த (தமிழ்நிலம்) பக்கங்களோடும், எளிய மக்களையும் சென்றடையும்படி, மாதம் இருமுறை வெளியிடலாம். அதோடு, நம் அருவருப்பற்ற கலை வளர்ச்சிக் கொள்கைக்கு உகந்த எளிய விளம்பரங்களையும் அதிகப்படியாக பிறமொழி கலவாத விளம்பரங்களையும், முற்றிலும் ஆங்கில விளம்பரங்களாகவும் இணைத்து நம் இதழ் அனைத்துப் பெட்டிக் கடைகளிலும் தொங்கும்படி செய்து, நம்மை நாம், பொருளியல் வலுப்படுத்தல் செய்வதோடு, அனைத்து மக்களையும் நம் கொள்கை, கோட்பாடுகள் சென்றடையும் படி செய்தல் ஓரளவு இயலக்கூடியதாக இருக்கும், என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும். இதை நன்கு கருதிப் பார்க்க வேண்டுமாய் அன்போடு வேண்டுகிறேன்.

ஓர் அன்பர் குறிப்பிட்டது போல், நாம் வணிக முறையில் இறங்கி, நாம் கொள்கை, கோட்பாடுகளை முன்னிறுத்தி இயங்குவோமாக. வணிகத்திற்கும் தங்கள் தொண்டிற்கும் வேறுபாடு தெரியாத அரை வேக்காடுளைப்பற்றி கவலற்க. பல்வேறு செயற்பாடுகளுக்காக, நாங்கள் விரைவில் நன்கொடை விடுக்கிறோம். பெறுக. நன்றி! இவண் -- த. வேலுச்சாமி, பல்லடம்,

O: *1311:* அன்பார்ந்த ஐயா, வணக்கம். தென்மொழி சுவடி 24, ஓலை: 6-இல் தென்மொழி இதழை நிறுத்துவது குறித்து மீண்டும் எழுதி இருக்கிறீர்கள்.

தென்மொழி இதழைப் பல இழப்புகளுக்கும் இன்னல்களுக்கு மிடையில் தொடர்ந்து இருபத் தொன்பது ஆண்டுகள் நடத்தியும், நம் அன்பர்களிடம் யாதொரு துணிவையும், வீரத்தையும் விளைவிக்காமல் போனபின், இதனைத் தொடர்ந்து செய்து என்ன விளைவை எதிர் பார்க்கப் போகிறோம் என்று மனம் நொந்து எழுதி இருக்கிறீர்கள்.

இருபத் தொன்பது ஆண்டுகள் தாங்கள் எழுதியும் நம் அன்பர்களிடம் துணிவும் வீரமும் ஏற்படவில்லை என்றால், அதற்குக் காரணம் நம் இனம் காலம் காலமாக அடிமைப்பட்டுக் கிடப்பதே. நம் மக்களிடம் அடிமை யுணர்வும் கோழைத்தனமும் அரத்தத்தில் கலந்து ஊறிப்போய் விட்டன. அவர்களை அதிலிருந்து மீட்க இன்னும் பல ஆண்டுக்காலம் பலரது தீவிர உழைப்புத் தேவை. இந் நிலையில் தென்மொழியை நிறுத்துவது என்பது நம் இன, நில விடுதலைப் போரை நிறுத்துவதற் கொப்பாகும். தங்களைத் தவிர வேறு எவரும் இப்பணியினைச் செய்யவும் முன்வர மாட்டார். (தொடர்ச்சி 34-ஆம் பக்கம்)

Scanned with CamScanner